பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 24 சனிக்கிழமை (11-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:317

# கனேடிய வெளிவிவகார அமைச்சர் 16 ஆம் திகதி பிரபாவைச் சந்திப்பார்

## ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் அவர் சந்தித்துப் பேசுவார்

கிளிநொச்சி,ஒக்ரோபர் 11

**எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை வன்னியில் சந்தித்துக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.**

கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலரைச் சந்தித்துப் பேசவுள்ள அவர், வன்னி சென்று பிரபாகரனுடனும் தற்போதைய நிலை குறித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

இச்சந்திப்பை புலிகளின் வட்டாரங்களும் உறுதி செய்துள்ளன.

தலைவர் பிரபாகரனுடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் சந்திப்பில் பங்குபற்றுவார்.

யாழ்ப்பாணத்துக்கு செல்லும் கனேடிய வெளிவிவகார அமைச்சர், யாழ். அரச அதிபர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் முனனோடியான ஏற்பாடுகளைக் கவனிக்க கனேடிய தூதரக அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் சென்றிருந்தனர்.(ம-3)

## புலிகளின் குழு நோர்வே விஜயம்

கொழும்பு,ஒக்.11

அயர்லாந்து சென்ற புலிகளின் அரசியல்துறையின் உயர் மட்டத்தினர், எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நோர்வேக்கு விஜயம் செய்யவுள்ளனர் என்று நோர்வேத் தூதரகம் தெரிவித்திருக்கிறது.

இவர்களுடன் மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி கருணா அம்மானும் செல்வார்.

இவர்கள் நோர்வேக்கு விஜயம் செய்யுமுன்னர் டென்மார்க்கிற்கு செல்வர்.

நோர்வேயில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளர்கள், அங்குள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் புலிகள் சந்தித்துப் பேசுவர்.

நோர்வேயின் பேர்கன் நகருக்குச் செல்லவும் புலிக்ள் குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

## தேர்தல் ஆணையாளர், இராணுவத் தளபதி ஆகியோர்களது பதவிக்காலம் நீடிப்பு

தயானந்த திஸாநாயக்கா தேர்தல் ஆணையாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரக்கூடியதாக இந்த நியமனம் வழங் கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை - இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் பலகல்லவின் சேவைக்காலமும் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்தின் பிரதான கட்டளையிடும் அதிகாரியாகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நேற்று தமிழர் பிரதேசமெங்கும் அனுஷ்டிப்பு

யாழ்பாணம்,ஒக்.11

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது பெண் மாவீரரான 2ஆம் லெப்.மாலதியின் நினைவு தினமும் தமிழீழ பெண்கள் எழுச்சி தினமும் நேற்றுத் தமிழர் தாயகம் எங்கும் எழுச்சியுடன் நடைபெற்றன.

யாழ் குடாநாட்டில் பிரதான நிகழ்வுகள் கோப்பாயில் இடம்பெற்றன. வன்னியில் பிரதான நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெற்றன.

கோப்பாய் துரவைப் பதுதியிலுள்ள 2ஆம் லெப். மாலதி நினைவாலயத்தில் பிரதான நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

கோப்பாய் கோட்ட எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் ஆசிரியர் வே.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வசந்தியும், ஈகச்சுடரினை மாவீரர் சிவகுமாரனின் சகோதரியான திருமதி யோகமலர் புண்ணியமூர்த்தியும் ஏற்றிவைத்தனர்.

மாலதியின் திருவுருவப் படத்திற்கு மாலதி மகளிர் படையணித் தளபதி தமிழ்செல்வி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து போராளிகள், பொது மக்கள், மாணவர்கள், பெண்கள், அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் மாலதியின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.



கோப்பாயில் நேற்று மாலை இடம்பெற்ற தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் மற்றும் விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவுதின நிகழ்வில் ஈகச்சுடரினை ஏற்றும் மாவீரர் நாராயணனின் தாயார்.

கோப்பாய் கோட்ட எழுச்சிப் பேரவை உறுப்பினர் வே.சண்முலிங்கம், ஆசிரியை திருமதி பாலகுமாரி அழகுதாஸன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர். மாலதி நினைவாலயச் சுற்றாடலில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

மாலை நிகழ்வுகள் மாலை 5 மணியளவில் ஆரம்பமாகின.

கோப்பாய் துரவையிலுள்ள மாலதியின் நினைவாலயத்திலிருந்து அவரது திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியம் மற்றும் பொது மக்கள் சகிதமாக கோப்பாய் கந்தசுவாமி கோயில் முன்றலுக்கு ஊர்வலமாக நகர்ந்து சென்றது.

கோப்பாய் வீதியிலுள்ள கலாசார மண்டபத்தில் பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதி பல்லவன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை மாலதி படையணித் தளபதி தமிழ்செல்வி ஏற்றினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ரயில் நிலைய விடுதி அருகே குழியில் மண்டை ஓடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள ரயில் நிலைய விடுதிக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை 4.15 மணியளவில் குழியொன்று தோண்டப்பட்ட போது மண்டையோடு ஒன்று வெளிவந்தது.

ரயில் நிலைய விடுதிக்குரிய மலசலகூடத் தொகுதியை அத்தியடி பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் அச்சுற்றாடலிலுள்ள மக்கள் புனரமைந்து வருகின்றனர். அதற்கான குழாயை புதைப்பதற்காக கால்வாய் ஒன்று வெட்டப்பட்டபோதே மனித மண்டையோடு வெளிவந்தது.



மீட்கப்பட்ட எச்சம்.

உடனடியாக கால்வாய் வெட்டும் பணியை நிறுத்திய ஊழியர்கள், அது குறித்து யாழ். பொலீஸாருக்கு தெரிவித்தனர். சம்பவ இடத்தைப் பார்வையிட்ட யாழ் பொலீஸார் நீதிவானுக்கு தகவல் கொடுத்தனர்.

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

### பண்டாரநாயக்க குடும்ப வாசஸ்தலமருகே

## கிரனேட் வெடித்து சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு.ஒக்.11

கொழும்பு நோஸ்மண்ட் பிளேஸில் பண்டாரநாயக்க குடும்பத்தினர் வாசஸ் தலத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் - நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்பில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

அந்த வீட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த கிரனேட் ஒன்றை 12 வயதுடைய அந்தச் சிறுவன் விளையாடிய சமயம் அது வெடித்தது என்று கூறப்பட்டது. சம்பவத்தில் அச்சிறுவன் உயிரிழந் தான்.

இந்த வீடு இரத்தினபுரியைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகரால் சமீபத்தில் கொள்வனவு செய்யப்பட்டது என்றும் -

வீட்டில் முன்னர் தங்கியதாகக் கூறப்படும் விமானப்படை அதிகாரி இந்தக்கிரனேட்டைக கைவிட்டுச் சென்றிருக்கலாம் என்றும் -

விசாரணைகளில் தெரியவந்தது. (ம-3)

## கூட்டணியின் செயற்பாடுகள் பற்றிய முக்கிய சந்திப்பு நாளை

யாழ்பாணம்,ஒக்.11

தமிழர் விடுதலைக் கூட்டணியின எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான முக்கிய சந்திப்பொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டணியின் எதிர்காலம் குறித்து தீர்க்கமான சில முடிவுகளை எடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சந்திப்பில் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளம்பரிதி முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.குடாநாட்டில் விபத்துக்கள் நடைபெறும் இடங்களிலிருந்து படையினர் தமது வாகனங்களை எடுத்துக் கொண்டு ஓடுவது ஒரு மனித உரிமை மீறல் என யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்த ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு ஈரானிய பெண்ணுக்கு

இவ்வாண்டுக்கான சமாதான நோபல் பரிசு ஈரானைச் சேர்ந்த சட்டத்தரணி ஷெரீன் எபாடி என்ற பெண்மணிக்கு வழங்கப்படவுள்ளது.

அந்நாட்டின் முதல் பெண் நீதிவான்களுள் ஒருவராக இருந்து இஸ்லாமியப் புரட்சியால் பதவி விலக நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட இந்தப் பெண்மணி பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஆற்றிய பணிகளை நோபல் பரிசுக்குழு வரவேற்கின்றது.

இந்தப் பரிசுக்காகப் பிரேரிக்கப்பட்ட 165 பேரின் மத்தியில் ஷெறீன் எபாடி தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கௌரவத்தின் மூலம் அவரது நாட்டில் மனித உரிமைகளை நிலைநாட்டுவதாகவும் ஜனநாயகத்திற்காகவும் போராடுவோருக்கு உந்து சக்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பொதுமக்கள்-பொலீஸார்,இராணுவத்தினர் இடையிலான உறவுகள் சீராக இல்லை

## யாழ். மேலதிக நீதிவான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

குடாநாட்டு மக்களுக்கும் பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது. இதுவே மக்கள் பொலீஸாருக்கும் படையினருக்கும் எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்கக் காரணம் என யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று நடந்த விசேட சந்திப்பு ஒன்றிலேயே அவர் இப்படிக்கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

குடாநாட்டில் இன்றுள்ள இக்கட்டான காலத்தில் இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. பொலீஸாருக்கும் - மக்களுக்கும் இடையில் ஓரளவு உறவு சீராக இருக்கின்றபோதும், பொதுமக்களுக்கும் - இராணுவத்தினருக்கும் உறவு முழுமையாக சீர்குலைந்துள்ளது.

மூன்று தரப்புகளுக்கும் இடையில இருக்கும் இடைவெளி நீக்கப்பட வேண்டும். பொலீஸாரிடமோ, படையினரிடமோ சென்றால், நீதி கிடைக்கும் என்ற நிலையில் இப்போது மக்கள் இல்லை.

எல்லாத்தரப்பினரும் நீதியாக நடந்தால் நல்லுறவு பலப்படுத்துவதுடன் இடைவெளியும் குறையும். சட்டப்படி நடக்கச் சகலரும் முன் வர வேண்டும். அப்போதுதான் குடாநாட்டில் விபத்துக்கள் குறைய வாய்ப்புக் கிட்டும் - என்றார் அவர். (ம-3)

# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்: நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்

## இருமுனைத் தாக்குதலுக்கு பொ.ஐ.மு.தயாராகிறது

மூன்று விடயங்களை முன்வைத்து பொதுஜன ஐக்கிய முன்னணி நாடு முழுவதும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதேவேளை, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வரவும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

பொ.ஐ.முன்னணி ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத தகவல்களைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

அரசுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும், கட்சித் தலைவர்கள் மாநாட்டில் இதற்கான தீர்மானம் எடுக்கப்படும்.

ஐநா, சபையில் ஈராக் போரை ஆதரித்து பிரதமர் ஆற்றிய உரை, உலக வர்த்தக சம்மேளனத்தில் மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிரான தீர்மானங்களை எதிர்த்து வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க வெளிநடப்புச் செய்யாமை, ஐக்கிய நாடுகள் சபையில செப்ரெம்பர் 25ஆம் திகதி நடைபெற்ற "பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஐநாவின் பங்களிப்பு" தொடர்பான கருத்தரங்கில் இலங்கைப் பிரதிநிதி எவரும் கலந்துகொள்ளாமை ஆகிய மூன்று விடயங்களை முன்வைத்தே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## சேவைநலன் பாராட்டுவிழா

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் பல வருடங்களாக ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும் கடைமையாற்றி ஓய்வு பெற்றவரும் இலங்கை அரசினால் சமாதான நீதிவானாக அண்மையில் நியமனம் பெற்றவருமான பிரம்மஸ்ரீ வி.பரிபூரணானந்த சர்மாவின் சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு வித்தியாசாலை மணடபத்தில் அதிபர் க.செல்வக்குமரன் தலைமையில் நடைபெறும்







தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உயிர் கொடுத்த முதலாவது பெண் போராளி 2ஆம் லெப். மாலதியின் நினைவு தினம் நேற்று கோப்பாய்யில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. பொது ஈகச்சுடரினை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வசந்தி ஏற்றுவதையும் மாணவர்கள் மலர் அஞ்சலி செலுத்துவதையும் மாணவிகள் அஞ்சலிக்காகக் காத்துநிற்பதையும் படங்களில் காணலாம். படங்கள்: வலி கிழக்குச் செய்தியாளர்.

# மத்திய மாகாண சாகித்திய விழாவில் அமைச்சர் சந்திரசேகரன் புறக்கணிப்பு

## மா.சபையில் புகார்; விசாரிப்பதாக முதலமைச்சர் அறிவிப்பு

"30 லட்சம் ரூபா செலவில் இன்று 11 ஆம் திகதியும் நாளை 12 ஆம் திகதியும் நுவரெலியாவில் நடைபெறும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் அரசின் சார்பில் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான அமைச்சர் பி. சந்திரசேகரன் புறக்கணிக்கப் பட்டிருப்பது மலையக மக்களில் ஒருபகுதியினரை அவமானப்படுத்துவதாகும்".

- இப்படி நேற்று மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவித்தார் மமமுன்னணி உறுப்பினரான எஸ். அருள்சாமி.

மாகாணசபைத் தலைவர் துரை. மதியுகராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உரையாற்றிய அருள்சாமி மேலும் கூறியதாவது:-

மத்திய மாகாண சபையில் தமிழ அமைச்சர் ஒருவர் இருந்தும் தமிழ் சாகித்தியவிழா அழைப்பிதழில் அமைச்சர் சந்திரசேகரனின் பெயர் வேண்டுமென்றே புறக் கணிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தொழிற்சங்கத்தின் பிரசாரத்திற்காக இப்படி ஓர் அமைச்சரை புறக்கட்டலாமா?

கடந்த கூட்டத்தின்போது சபைக்கு சமகால மொழிபெயர்ப்பு வசதி செய்து கொடுக்கப்படவேண்டு மென்று கோரினேன். அதற்கு என்ன நடந்தது.

**முதலமைச்சர் வசந்த அலுவிகாரை:** 2004 ஆம் ஆண்டில் இதனை நடைமுறைப்படுத்த நாம 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். தமிழ் சாகித்திய விழா தொடர்பான அமைச்சர் இராதாக்கிருஷ்ணன் சபையில இன்று இல்லை. நீங்கள் தெரிவிக்கும் புகார்கள் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பேன்.

**அருள்சாமி:** இப்படித்தான் பல உறுதிமொழிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. எதுவும் நடை பெறவில்லையே?

**தலைவர் துரை மதியுகராஜா:** 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு கருமங்கள் இடம் பெறாது போனால் அடுத்த ஆண்டு ஜனவரியில் எனது தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துவிடுவேன். நிச்சயமாக இதனை நடைமுறைப்படுத்துவேன்.

**அனுரா பெர்னாண்டோ:** (பொஐமு.) எமக்கு வரும் சில அழைப்பிதழ்களில் சிங்கள மொழி புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது.

## வடமாகாண அதிபர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

வடமாகாண அதிபர்கள் சங்க உறுப்பினர்களுக்கான கூட்ட மொன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் எம்.செல்லையா கேட்டுள்ளார். (ம-9)

## வானைப் பிளக்கும் உரிமைக் கோஷங்களுடன்

# தென்கிழக்கு பல்கலை மாணவர் நேற்று வீதி மறியல் போராட்டம்

வானைப் பிளக்கும் வகையில் உரிமைக் கோஷங்களை முழங்கியவாறு நேற்று சாலைமறியலில் ஈடுபட்டது தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம். ஒலுவில் சுழியோடைப் பாலத்தில் நடந்த மறியல் காரணமாக கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதிப் போக்குவரத்து ஸ்தம்பித்தது. வாகனங்கள் நகர முடியாமல் நீண்ட வரிசையில் பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் நின்றன.

முஸ்லிம்களின் உரிமைகளை வழங்கக் கோரியும் இந்த விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பிக்கள் ஆகியோர் நடந்து கொள்ளும் விதம் குறித்து அதிருப்தி தெரிவித்தும் கிண்ணியாவில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டித்துமே தென்கிழக்குப் பல்கலை மாணவர் சமூகம் இந்தச் சாலைமறியல் போராட்டத்தில் இறங்கியது. காலை 8.30 முதல் 11 மணிவரை (இரண்டரை மணி நேரம்) இந்தச் சாலை மறியல் போராட்டம் நடந்தது. இதில் பல்கலைக்கழக மாணவ, மாணவியருடன் பெரும் எணணிக்கையான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

"போலிச் சமாதானம் வேண்டாம்", "முஸ்லிம்களை அடகுவைத்து வாழும் முஸ்லிம் தலைமைத்துவங்கள் தேவையில்லை", "எங்கள் மண்ணில் எங்களை வாழவிடு!", "முஸ்லிம் தலைவர்களே! மௌனம் ஏன்?" நேற்று மூதூர், வாழைச்சேனை, இன்று கிண்ணியா! "எமது அபிலாஷைகள் அரசியலாக வேண்டும் அல்லது நமது முஸ்லிம் அரசியல் வாதிகள் சாதாரண மக்களாக வேண்டும்" - இவை போன்ற கோஷங்கள் உணர்ச்சி பொங்க எழுப்பப்பட்டன. இந்த வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் மறியலில் ஈடுபட்டவர்கள் ஏந்திநின்றனர்.

மறியலின் இறுதியில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாணவர் சமூகம் பின்வரும் தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றி பிரகடனப்படுத்தியது.

★ அரசு முஸ்லிம்கள் விடயத்தில அசமந்தமாக இருந்துவருவதால் முஸ்லிம் அரசியல் தலைமைகளும், பிரதிநிதிகளும் எதையுமே சாதிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தாம் பெற்றிருக்கும் பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

★ சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும், உள்நாட்டிலும் முஸ்லிம் விரோத முகத்தை மிகத் தெளிவாக வெளிப்படுத்திவரும் பிரதமர் ரணிலின ஆட்சிக்கு முஸ்லிம் சமூகம் இனியும் முட்டுக் கொடுக்கத் தேவையில்லையென்பதை உணர்ந்து முஸ்லிம் தலைமைகள் செயற்படவேண்டும்.

★ மலேசியாவில் நடைபெறவிருக்கும் இஸ்லாமிய மாநாட்டுக்கு அரசின் பிரதிநிதியாகச் செல்லவிருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம், வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை மிகத் தெளிவாக அங்கு எடுத்துப் பேசவேண்டும்.

★ மஜீத்புரத்தை மீட்டெடுக்க முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் உடன் களத்திலிறங்க வேண்டும்.

★ கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மூலம் விரிசலடைந்துள்ள தமிழ், முஸ்லீம் உறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசும், தமிழ், முஸ்லீம் தரப்புகளும் முழு முயற்சி எடுக்கவேண்டும்.

இவையே பிரகடனப்படுத்தப்பட்ட தீர்மானங்களாகும்.

# கிண்ணியாவில் அசம்பாவிதங்கள் இல்லை அச்சத்தால் மக்கள் நடமாட்டம் குறைவு

## அமைதியைப் பேண புலிகள் கோரிக்கை


கிண்ணியா பகுதியில் வியாழனன்று மாலை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலை விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும், மக்கள் நடமாட்டம் வெகுகுறைவாகவே காணப்பட்டது.

இடிமண் பகுதியிலிருந்து அச்சம் காரணமாக வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள் தொடர்ந்தும் ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயத்திலேயே தங்கியுள்ளன. இவர்களுக்கான சமைத்த உணவை அயல் கிராம வாசிகள் வழங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, நேற்றுக்காலை, பூவரசந்தீவு மற்றும் தோட்டப் பகுதிகளில் உள்ள எல்லைக் கிராமங்களின் முஸ்லிம் குடும்பங்கள அங்கிருந்து வெளியேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் நண்பகல் வரை அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கிண்ணியாவில் இரு சமூகங்களுக்கிடையேயும் அமைதியையும சமாதானத்தையும் மீண்டும் நிலைநாட்டி ஒற்றுமையைப் பேணுமாறு விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினர் அறிக்கை ஒன்றில் கோரியுள்ளனர். சமாதான நடவடிக்கைகளைக் குழப்ப முனையும் அரசியல் வாதிகளின் சூழ்ச்சிக்கு இரையாக வேண்டாம் எனவும் அறிக்கையில் கோரப்பட்டிருக்கிறது.



இந்தோனேஷியாவுக்கு அமெரிக்க அதிபர் அடுத்தவாரம் மேற்கொள்ளவுள்ள விஜயத்துக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் நேற்று தலைநகர் ஜஹார்த்தாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே வீதியில் படுத்தபடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களின் பின்னணியில் கலகம் அடக்கும் பொலீஸாரையும் படத்தில் காணலாம்.

# சிரியா மீது பொருளாதாரத் தடைவிதிக்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் சட்டம்

வாஷிங்ரன்,ஒக்.11

தீவிரவாதத்துக்கு ஆதரவான நாடு என்ற குற்றத்தின் பேரில் சிரியா மீது பொருளாதாரத் தடை கொண்டுவர வகை செய்யும் சட்டம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு நாடாளுமன்றம் அனுமதி அளிக்க இருக்கிறது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையேயான மோதல்களால் அமெரிக்காவுக்கும், சிரியாவுக்கும் உள்ள உறவு சீர்குலைந்தது. ஈராக் மீது அமெரிக்கா நடத்திய போர், சிரியாவில் உள்ள பலஸ்தீன தீவிரவாதிகள் முகாம் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தியது ஆகிய சம்பவங்களால் இந்த உறவு மேலும் மோசமானது. இந்தநிலை தீவிரவாதத்துக்கு ஆதரவாக சிரியா இருப்பதாகவும், பேரழிவு ஆயுதங்களை அது தயாரிப்பதாகவும் கூறி அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடையைக் கொண்டுவர வகை செய்யும் சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சட்டத்துக்கு சர்வதேச உறவுகள் குறித்த நாடாளுமன்ற குழு ஒப்புதல் அளித்தது. இந்தச் சட்டத்துக்கு 281 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளித்து அதை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தனர். இந்தச் சட்டம் மீது விரிவான விவாதம் நாளைமறுதினம் முதல் 17ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் சிரியா மீது பொருளாதாரத் தடை கொண்டுவரப்படும். தீவிரவாதத்தை சிரியா நிறுத்திவிட்டது என்று புஷ் அறிவிக்கும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும். இந்தத் தடை அமுலில் இருக்கும் காலத்தில் சிரியாவுக்கு அமெரிக்காவின் ஏற்றுமதி தடை செய்யப்படும். சிரியாவில் அமெரிக்க முதலீடு இருக்காது. தூதரக உறவுகள் வரையறுக்கப்பட்டிருக்கும். (ஐ)

## நடிகைக்கு 26 ஆண்டு சிறைத்தண்டனை

தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பிய நாட்டைச் சேர்ந்தவர் லீடிப் ரேஸ் (வயது-21) சினிமா நடிகை ஆவார்.

இவர் நடித்த 'தி ரோஸ் சொல்ஜர்' என்ற படம் இவருக்கு பெரும் புகழைத் தேடித் தந்தது. இந்தப் படம் கேன்ஸ் பட விழாவில் திரையிடப்பட்டது.

இவர் தன் காதலனுடன் சேர்ந்து, ஒரு டக்ஸி சாரதியை கொலை செய்து பணத்தை கொள்ளையடித்தார் என்று அவர் மீது தொடரப்பட்ட வழக்கில் இவருக்கு 26 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கர்ப்பிணி பெண்ணான அவர், பிரசவத்துக்காக பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

## டில்லி வருகிறார் பிரிட்டன் இளவரசர்

புதுடில்லி,ஒக்.11

பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் வரும் 28ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதிவரை டில்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களில் சுற்றுப்பயணம் செய்கிறார். இதுகுறித்து பிரிட்டன் தூதரகம் தெரிவித்ததாவது:-

பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் அரசுமுறை பயணமாக இந்தியா வருகிறார். ஜனாதிபதி அப்துல் கலாம், துணை ஜனாதிபதி பைரோவன் சிங் ஷெகாவத் உள்ளிட்டோரை அவர் சந்தித்துப் பேசுகிறார். இதனைத் தவிர அரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கும் மும்பை நகருக்கும் இளவரசர் சார்ள்ஸ் செல்கிறார்.

சேவைப்பணிகள், வளர்ச்சித் திட்டங்கள், இளைஞர் நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளிலும் சார்ள்ஸ் பங்கேற்கிறார். சார்ள்ஸ் பயணத்தின் மூலம் இந்திய - பிரிட்டன் உறவுகள் பலப்படும்.

- இவ்வாறு பிரிட்டன் தூதரகம் தெரிவித்தது. (ஐ)

# நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிக்கு சொந்தமாக செல்போன் கூட இல்லை!

நியூயோர்க்,ஒக்.11

இவ்வாண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பீட்டர் அக்ரே மற்றும் மெக்கினான் ஆகியோரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் விஞ்ஞானி மெக்கினான் (வயது 47) நியூயோர்க் ரொக்பெல்லர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். நோபல் பரிசுக்கு அவர் பெயர் அறிவிக்கப்பட்டதை அடுத்து நியூயோர்க்கில் மெக்கினானை நிருபர்கள் சந்தித்துப் பேசினர். அப்போது அவர் தனக்கு சொந்தமாக ஒரு செல்போன் கூட இல்லை என்ற விவரத்தை கோடிட்டுக் காட்டினார். பேட்டியில் மெக்கினான் கூறியதாவது:-

நோபல் பரிசுக்கு எனது பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது பற்றி முதலில் எனது உதவியாளர் தான் கூறினார். அதை முதலில் நான் நம்பவில்லை. 'வேறு யார் பெயராவது இருக்கும், தப்பாகச் சொல்லாதே!' என்று அவரைச் சத்தம் போட்டேன்.

ஆனாலும், அவர் விடாப்பிடியாக சொன்னார் சரி என்று இன்டர்நெட்டில் தேடினேன். ஆனால் அப்போது அதிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

சிறிது நேரத்தில் பல்கலைக்கழகத்தில் இருந்து தொலைபேசியில் தகவலைச் சொன்னார்கள்.

இந்தத் தகவல் உறுதியாகும் வரை என் மனதில் ஒரே கேள்விக் குடைச்சல். 'நோபல் பரிசு கிடைத்திருக்கிறது என்று கூறுகிறார்களே. ஆனால் சுவீடனிடம் இருந்தோ அல்லது நண்பர்கள் வட்டத்தில் இருந்தோ எந்தத் தகவலோ, பாராட்டோ நம்மை உடனடியாக வந்து சேரவில்லையே. ஏன்?' என்று மண்டையை உடைத்துக்கொண்டிருந்தேன்.

இப்போது தான் புரிந்தது இதற்கு காரணம் நம்மிடம் செல்போன் இல்லாததே என்று. சொந்தமாக செல்போன் வாங்கி வைத்துக்கொள்ள நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன். இவ்வாறு அவர் சிரிப்பலைகளுக்கிடையே குறிப்பிட்டார். (ஐ)

# நிலவுக்கு மனிதனை அனுப்புகிறது சீனா: அதற்கு 12 வீரர்களுக்கு தீவிர பயிற்சி

பீஜிங்.ஒக்.11

நிலவுக்கு மனிதனை அனுப்ப சீனா திட்டமிட்டுள்ளது. 2010ஆம் ஆண்டுக்குள் இந்தத்திட்டம் நிறைவேற்றப்படும். இதற்காக 12 வீரர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

விண்வெளி ஆராய்ச்சியில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்த சீனா, இப்போது விண்வெளி ஆராய்ச்சியில் தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கிறது.

1999ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி ஆள் இல்லாத விண்கலங்களை சீனா விண்ணுக்கு அனுப்பியது.

இதில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஷென் ஷோவ் - 05 என்ற ரொக்கெட்டை சீனா விண்வெளிக்கு அனுப்புகிறது. இந்த ரொக்கெட்டில் விண்வெளி வீரர் ஒருவர் அனுப்பப்படுகிறார். இதற்காக 3 பேருக்கு ஏற்கனவே பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சி வெற்றிபெற்றால் அமெரிக்கா, ரஷியாவை தொடர்ந்து சீனாவும் இந்த வரிசையில் 3ஆவது இடத்தைப் பிடிக்கும். விண்வெளி ஆய்வுக்காக சீனா கடந்த 1992ஆம் ஆண்டு முதல் 105 கோடி டொலர் செலவிட்டு இருக்கிறது. (ஐ)



பொலிவியாவில் கொக்ஹெய்ன் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அரசுக்கு எதிராக கடந்த ஒரு மாதமாக ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். அவ்வாறு நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த ஒருவரை பொலீஸார் தூக்கிச் செல்கின்றனர்.

உலக அரங்கில்

# வாலிபரைக் கடத்தினான் வீரப்பன்? 'வதந்தி' என்கிறார் முதல்வர் கிருஷ்ணா

கர்நாடகா,ஒக்.11

கர்நாடக - தமிழ்நாடு எல்லையில் பலசரக்குக்கடை நடத்திவரும் வாலிபரை, சந்தனக் கடத்தல் வீரப்பன் கடத்தினான் என்று வெளியான தகவல்கள் 'வெறும் வதந்தி' என கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவும், அதிரடிப்படை பொலீஸாரும் மறுத்துள்ளனர்.

பொதுவாக வீரப்பனின் அட்டகாசம் செப்ரெம்பர் மாதத்தில் நடப்பது வழக்கம். அந்த மாதத்தில் வரும் மஹாளய அமாவாசை வீரப்பனுக்குப் பிடித்த நாள். அமாவாசையில் ஆட்களைக் கடத்துவது பிடித்தமான ஒன்று. மஹாளய அமாவாசை காலத்தில் ஆள்களைக் கடத்தினால், பின்னர் மழைகாலம் ஆரம்பித்துவிடும், பொலீஸாரால் தன்னை நெருங்க முடியாது என்பது வீரப்பனின் கணிப்பு.

கடந்த செப்ரெம்பர் மஹாளய அமாவாசை தினத்தில் விஐபிக்கள் யாராவது ஒருவரை வீரப்பன் கடத்தலாம்



என்ற சந்தேகத்தின் பேரில் சத்தியமங்கலம் வனப்பகுதியிலும், சுற்றியுள்ள கிராமத்திலும் பொலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஆனால், பொலீஸார் நினைத்தது போல் எதுவும் நடக்கவில்லை.

இந்நிலையில், தமிழகம், கர்நாடகம் எல்லைப்பகுதியிலுள்ள கத்திப்பட்டி கிராமத்தில் பலசரக்குக் கடை நடத்தி வரும் செல்வம் (வயது-27) என்பவரை வீரப்பன் கடத்திச் சென்றுவிட்டான் என்று, கடந்த புதனன்று வதந்தி கிளப்பப்பட்டது. வீரப்பன் கடத்தினான் என்று கூறப்பட்ட செல்வம், பலசரக்குக்கடை நடத்திவருகிறார். வீரப்பனுக்கு இவரது கடையில் இருந்துதான் பலசரக்குச் சாமான்கள் செல்கின்றன என்று தகவல் கிடைத்ததை அடுத்து, செல்வத்தை அதிரடிப்படைப் பொலீஸார் மாதக்கணக்கில் கண்காணித்து வருகின்றனர்.

இதனிடையே, அதிரடிப்படைப் பொலீஸாரின் தீவிர கண்காணிப்பில் இருந்து வரும் செல்வம் கடத்தப்பட்டார் என்று வந்துள்ள செய்திகள் சுத்தப்பொய் என்று கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவும், அதிரடிப்படைப் பொலீஸாரும் மறுத்துள்ளனர். (ஐ)

# பஞ்சாயத்துத் தீர்ப்பு முறைக்கு தமிழக அரசு விரைவில் தடை

சென்னை,ஒக்.11

கிராமங்களில் செய்யும் பஞ்சாயத்துகளுக்குத் தடை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர தமிழக அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

சமீபத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் ஊர் பஞ்சாயத்துக் கூடி, சுகந்தி என்ற ஒரு பெண்ணுக்கு கடும் தண்டனை விதித்தது. மத்திய அரசு பணியில் இருக்கும் அந்த பெண், தனது கணவரிடம் விவாகரத்துக் கோரியிருந்தார். அதற்காக அந்த ஊர் பஞ்சாயத்து அவருக்கு பெரும் தொகை அபராதமாக விதித்தது. பஞ்சாயத்தார் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினால் எத்தனை முறை காலில் விழுகிறாரோ அதற்கேற்ப அபராதத் தொகை குறைக்கப்படும் என்று பஞ்சாயத்தார் தீர்ப்பு கூறினர். இதன்படி, அந்தப் பெண்ணும் அவரது தாயும் பலமுறை பஞ்சாயத்தார் காலில் விழுந்தனர். இதன்பின் அந்தப் பஞ்சாயத்தாருக்கு எதிராக பொலீஸில் சுகந்தி புகார் கொடுத்தார்.

இந்த வழக்கில் பிணை கோரி பஞ்சாயத்தார், உயர்நீதிமன்றத்தில் மனு செய்தனர். இந்த வழக்கை நீதிபதி கற்பக விநாயகம் விசாரித்து தீர்ப்பு கூறினார். தீர்ப்பில் இது போன்ற கொடுமையான, பழங்கால பஞ்சாயத்து முறைகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும், இதற்காக தமிழக அரசு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும் என்றும் நீதிபதி குறிப்பிட்டிருந்தார். இதை ஏற்று தற்போது புதிய சட்டம் கொண்டுவர தமிழக அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாக உள்துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தீர்ப்பின் நகலைப் பெற்று அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும், விரைவில் சட்டம் தயாரிக்க சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் சட்டசபை கூடவிருக்கிறது. அப்போது வரும் தொடரில் புதிய சட்டத்திற்கான பிரேரணை தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### வலிகாமம் மேற்கு, தென்மேற்கு பகுதிகளில்

# கட்டாக்காலிகளின் தொல்லையால் நெற்செய்கை பாதிப்புறும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

நவாலிப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் பெரும்போக வேளாண்மை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் கட்டாக்காலிகளின் தொல்லை குறைய வில்லை என்று அப்பகுதி விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

சில நெற்செய்கை நிலங்களில் நெற்பயிர்கள் முளைவிடத் தொடங்கியுள்ளன என்றும் இவற்றை இந்தக் கட்டாக்காலிகள் அழித்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

கட்டாக்காலிகளின் தொல்லை குறித்து நவாலி விவசாயிகள் சம்மேளனம் கடந்த காலங்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுப்பது வழமை என்றும் -

இம்முறையும் மேற்படி சம்மேளனம் பொதுமக்களுக்கு கால்நடைகளை கட்டிவளர்ப்பதன் அவசியம் குறித்து அறிவிக்க வேண்டும் என்றும் - நவாலிப் பகுதி விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

வட்டுக்கோட்டை, சுழிபுரம் மற்றும் சங்கானை ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது என்றும் - இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்ளை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

எனவே, கட்டாக்காலிகளைக் கடடுப்படுத்த இப்பகுதி அரசநிறுவனங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-10-175-185)

# விழிப்புலனற்றோருக்கு சுயதொழில் வாய்ப்பு

### நலன்புரி அமைச்சின் உதவிச்செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.11

குடாநாட்டில் வசிக்கும் விழிப்புலனற்றோருக்கு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சமூகநலன்புரி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கமைய சமூகநலன்புரி அமைச்சின் உதவிச் செயலாளர் ஏ.ஸ்ரீசேன கடந்த 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

யாழ்.வருகை தந்த இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள பதினான்கு பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கும் நேரடியாக விஜயஞ்செய்து விழிப்புலனற்றோர், பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்களைச் சந்திப்பதுடன், விழிப்புலனற்றோரின் நலன்குறித்தும் அவர்களைப் பராமரிப்பவர்களின் விவரங்களையும் திரட்டிவருகின்றார்.

கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகைதந்த இவர், அன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிற்கும், மறுநாள் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிற்கும் விஜயம் செய்தார். தொடர்ந்து குடாநாட்டில் உள்ள ஏனைய பிரதேச செயலகங்களுக்கும் இவர் விஜயஞ்செய்து வருகின்றார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயம் குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சின் உதவிச் செயலாளர்,

இலங்கையில் உள்ள விழிப்புலனற்ற அனைவரும் ஏனையவர்களைப் போன்று சுயதொழிலில் ஈடுபடவேண்டும். சமூகத்தில் ஏனையவர்களுடன் ஒப்பிடும் வகையில் மதிக்கப்படவேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் அடிப்படையில் தென்பகுதியில் இந்தத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி உள்ளோம். தற்பொழுது வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட சகல இடங்களிலும் இதனைச் செயற்படுத்தும் அதேவேளை, அடுத்தமாத நடுப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார்.(எ-6)


**படிவம் - G.C.E. (A/L)**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தரம்) - 2004 ஏப்ரல் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி:
05-11-2003

(24-15-16) (C-30642)

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
T.PHONE : 021- 222 3081


# நாட்டுக்கூத்து போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். திருமறைக்கலாமன்றம் நடத்தும் தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 5 மணி வரையும் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களையும், ஆர்வமுள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-6)

# ஆண்டுவிழாவும் மலர் வெளியீடும்

வடமராட்சி,ஒக்.11

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள உயர்தரப் பாடசாலையின 175 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் மலர் வெளியீட்டு விழாவும் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபை பிரதம நூலகர் எஸ்.திருச்செல்வம் மலரை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துவார். மலரின் முதற்பிரதியை முன்னாள் மாகாணக் கல்விப பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பெற்றுக்கொள்வார்.

(எ-6-173)

# வலி.மேற்கில் பனம் விதை நடுகை

வலி.மேற்கு,ஒக்.11

அராலி மேற்கு, அராலி மத்தி, அராலி வடக்கு, மூளாய் ஆகிய இடங்களில் பனம் விதைகளை நடுவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் அழிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான பனை மரங்களை ஈடுசெய்யும் நோக்கில் பனை மீள்நடுகையினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(எ-175)


**படிவம்**

உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்களில் 2004 கல்வி ஆண்டுக்காக மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவம் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி:
10-11-2003

(24-15-16) (C-30641)

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
T.PHONE : 021- 222 3081



**சித்திரமும் வடிவமைப்பும்**

நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

I.A.T

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

(23505) (24-15-16)


### யாழ்.பொலீஸ் நிலையத்தில் நடைபெறும்

# காணாமற்போனோர் குறித்த விசாரணைகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளுக்காக யாழ். பொலீஸ் நிலையத்திற்கு வருகைதருமாறு பின்வரும் காணாமற்போனோரின் முறைப்பாட்டுக்காரர், சாட்சியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணை இன்றும் நாளையும் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். பொலீஸ் நிலையத்தில் இயங்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் நடைபெறும் என்றும் -

சம்பந்தப்பட்டவர்களை உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கே.உதயபாஸ்கரன் (சாவகச்சேரி வடக்கு கோ.இல.153), ஆனந்தராசா நல்லதம்பி (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி கோ.இல.14), குணரத்தினம் ஆறுமுகம் (கைதடி மேற்கு கோ.இல.237), மார்க்கண்டு ரங்கநாதன் (சப்பச்சி மாவடி, சாவகச்சேரி கோ.இல-265),

மயிலோன் பரமநாதன் (நாவற்காடு, கோ.இல.284), நாகமுத்து பிரபாகரன் (சாவகச்சேரி கோ.இல.316), பி.குணசேகரன் (கோவிலடி மேற்கு, கைதடி கோ.இல.343), இராமநாதன் பிரேம்குமார் (சாவகச்சேரி கோ.இல.422), ராசலிங்கம் அன்பழகன் (நவபுரம், கைதடி கோ.இல.497), சற்குணராஜா சுப்பிரமணியம் (கைதடி மத்தி கோ.இல.497),

சுப்பிரமணியம் ஜெகதீபன் (கண்டி வீதி கோ.இல 619), சுதர்சன் சிவஞானம் (மட்டுவில் மேற்கு கோ.இல. 628), சுப்பிரமணியம் ரவீந்திரன் (கைதடிச்சந்தி கோ.இல.633), தனபாலன் சிறீஸ்கந்தராஜா (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி கோ.இல.653), கதிரவேலு யோகேஸ்வரன் (தவசிகுளம், கொடிகாமம் கோ.இல.226), பி.சந்திரகுமார் (கச்சாய் வீதி, கொடிகாமம் கோ.இல.348),

பூரணச்சந்திரன் சத்தியசீலன் (கொடிகாமம் கோ.இல.395), எஸ். சத்தியசீலன் (வண்ணார்பண்ணை கோ.இல.473), அகிலேஸ்வரன் அமலராஜ் (மிருசுவில் கோ.இல.13-110), குஞ்சன் அருந்தவராசா (கைதடி மத்தி கோ.இல.13-412),

பூரணன் செல்வகுமார் (கைதடி, சாவகச்சேரி கோ.இல.389), குணரத்னம் (ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை கோ.இல.351), பாலன் சிவராசா (மட்டுவில் கிழக்கு கோ.இல. 475)

தேவபாலன் தர்மபாலன் (வீரபத்திரர் கோவிலடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி), அருந்தவராசா செல்வரத்தினம் (ஏழாலை வடக்கு ஏழாலை கோ.இல.328). (எ-12)

**கண்ணீர் அஞ்சலி**

கவிமாமணி மஹா வித்துவான் பிரம்மஸ்ரீ N.வீரமணி ஐயர்
அவர்களின் மறைவு கலையுலகிற்குப் பெரும் பேரிழப்பாகும்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இசையாசிரியர் கழகம்,
வலயம் -1.

(23514)(27-24-19-16)

**கண்ணீர் அஞ்சலி**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியலாளர்
திரு.தயாபரன் அவர்களின் அன்பு மாமனாரும்
திருமதி Dr.சகிதேவி தயாபரன்
(யாழ். போதனா வைத்தியசாலை)
அவர்களின் பாசமிகு தந்தையாருமாகிய
கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை
அவர்களின் மறைவு மிகுந்த வேதனையைத் தருகிறது. அன்னாரின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது. அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

16, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(23515) (24-19-16)

அப்பலோ வைத்திய நிலையத்தினர்
(கண் சிகிச்சைப் பிரிவு).


**மாபெரும்**
**மாட்டுவண்டில் சவாரிப்போட்டி**

இடம்: நீர்வேலி மைதானம்

காலம்: நாளை (12.10.2003) ஞாயிறு பிற்பகல் 2.00 மணி.

ஞானவயிரவர் கோவில்,
புத்தூர்.

(23510) (24-19-16)



**A COURSE IN PRACTICAL ACCOUNTING**

கணக்கியலில் செய்முறைப் பயிற்சிநெறி

உயர்தரப் பரீட்சையில் கணக்கியலைப் பாடமாகக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- பயிற்சிநெறிக் காலம் 06 மாதங்கள்.
- பயிற்சிநெறி விடயங்கள்: அடிப்படைக் கணனிக் கல்வி, Windows, Excel, Internet, கணனி மூலம் கணக்கீடு, ஆங்கிலம், செய்முறை வியாபாரக் கணக்கீடு ஆகியவை.
- காலை விரிவுரைகள் முடிந்த பின்னர் மாலை செய்முறைப் பயிற்சி வழங்கப்படும்.
- கிழமை நாள்களில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை.

குடும்ப வருமானம் குறைந்தவர்களுக்கு சலுகை அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும். தூர இடங்களில் உள்ளவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். சிறந்த முறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உண்டு.

கீழ்வரும் விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும்.

JASEEWA

(23507) 140, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (24-15-16)



சிறுவர் கற்றலில் புதிய பரிமாணம்






நவீன கணனி
உலகை எதிர்கொள்ள
உங்கள் பிள்ளை
தயாராக வேண்டாமா?

நவீன கற்றல்
விளையாட்டு
சாதனங்கள்

ஆங்கிலம் ~ கணிதம் ~ விஞ்ஞானம்

முன்பள்ளி நிலையங்கள் கனிஷ்ட பாடசாலைகள்
தொகையாக வாங்கினால் பயன் கிடைக்கும்.

ARUNS SPORTS SPOT


இல.257, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/30637) UTHAYAN


எம் இதயத்தின் நீங்காத நினைவில்

**எம்முடன் ஐயா.... ஆண்டு மூன்று**

மண்ணில்
05
08
1921



விண்ணில்
11
10
2000

**அமரர் டானியல் முருகேசு வேதநாயகம்**

(இளைப்பாறிய மேற்பார்வையாளர், சுகாதாரத் திணைக்களம்)

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மை நல்வழிப்படுத்திய எமதன்பு
ஐயாவை ஆண்டு மூன்றில் நினைவு கூருகின்றோம்.

"அன்னம்"
வதிரி, கரவெட்டி. (23511)(27-24-15-16)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# உதயன்

## இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்தும் காரணிகள்

வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகம் தொடர்பாகக் கடந்த சில தினங்களாக வெளிவந்த செய்திகள் நோக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

★ வடக்கு - கிழக்கு மாகாணசபையின் அடுத்த ஆண்டுக்கான செலவுநிதி மதிப்பீட்டில் 210கோடி ரூபாவுக்குத் திடீர் வெட்டு விழுந்துள்ளது. திறைசேரியின் கைங்கரியம் இது.

★ புதிய நியமனம் ஏதும் வழங்குவதற்குத் தனக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்று வடக்கு - கிழக்கு மாகாண அரசின் குறியீட்டுத் தலைவரான ஆளுநரே அறிவித்துவிட்டார். "தேவையான சந்தர்ப்பங்களில் மீள் நியமனங்களையும் பதில் நியமனங்களையும் வழங்கவே அமைச்சரவையினால் நான் அறிவுறுத்தப்பட்டுள்ளேன். அதனால், மீள்நியமனங்களை நிறுத்தி, புதிய நியமனங்களையோ அல்லது பதவி உயர்வுகளையோ வழங்க முடியாதநிலையில் நான் இருக்கிறேன்" - என்று ஆளுநரே தெரிவித்திருக்கிறார்.

★ வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கணக்கு விவரங்கள் இவ்வளவு காலமும் சரியான முறையில் பேணப்படவில்லை என்பதை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரே ஒப்புக்கொள்கின்றார். பதில் கணக்காளர்களாக நியமனம் பெற்ற கணக்குப் பதிவாளர்களில் ஒரு சிலர் குறைந்த செயற்றிறமை உடையவர்களாக இருந்தமை இதற்கான காரணம் எனவும் ஆளுநர் கூறியிருக்கின்றார்.

இந்தச் செய்திகள் தெளிவாக சில விடயங்களை எடுத்துக்காட்டுகின்றன.

கடந்த இரு தசாப்தகால கொடூரப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டு, அடிப்படைக் கட்டுமானங்களைக்கூட அதிகம் இழந்து, நலிவுற்றிருக்கும் பிரதேசம் வடக்கு - கிழக்குதான். அதற்கான வழமையான உத்தேச செலவு நிதி மதிப்பீட்டில் கூட வழமைபோல கைவைத்து வெட்டியிருக்கின்றது திறைசேரி. அதுவும் கொஞ்சநஞ்சமல்ல. 210கோடி ரூபாவுக்கு - அதாவது உத்தேச மதிப்பீட்டில் சுமார் இருபத்தைந்து சதவீதத்திற்கு - காற்பங்குக்கு - கொழும்பிலிருந்துகொண்டு வெட்டு - வேட்டு - வைத்திருக்கின்றார்கள் அரசின் அதிகாரிகள்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆள்களை நியமிக்கக் கூடத் தனக்கு அதிகாரம் இல்லை என்பதை சபையின் குறியீட்டுத் தலைவரான - அரசினதும், ஜனாதிபதியினதும் சார்பில் அந்த சபையை நிர்வகிக்கின்ற சகல அதிகாரமும் கொண்டவர் எனக் கருதப்படுகின்ற - ஆளுநரே ஒப்புக்கொண்டிருக்கின்றார். எந்த நியமனத்திற்கும் கொழும்பில் உயரதிகாரிகளையும், மத்திய அமைச்சரையும் எதிர்பார்த்துத் தவம் இருக்கும் நிலையில்தான் ஆளுநர் பதவி நிற்கின்றது.

இதனால், மாகாண நிர்வாகத்திற்கு இன ரத்தம் பாய்ச்ச முடியாத நிலைமை. ஓய்வுபெற்று வீட்டுக்குச் செல்லவேண்டிய மூத்தோரை பணியில் நீடிக்கச் செய்யும் இக்கட்டு. ஏற்கனவே நீண்டகாலம் சேவை முடித்தவர்களுக்கு பதவி உயர்வோ, புதிய பதவிகளையோ வழங்க முடியாத பிரச்சினை.

இந்தச் சித்துவத்தில்தான் வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகம் போய்க்கொண்டிருக்கின்றது.

மக்களின் விருப்பத்திற்கமைவான உரிய அரசியல் தலைமைத்துவமோ, அத்தகைய தலைமைத்துவத்தின் வழிகாட்டலோ மாகாணசபை நிர்வாகத்திற்கு இல்லை. இதனால், அதிகாரிகள் மட்டத்தில் பூதாகாரமாகத் தலைவிரித்தாடும் குளறுபடிகளும், போட்டிகளும், குழப்பங்களும், நிர்வாகச்சீர்கேடுகளும் வெளி அரசியல் தலையீடுகளால் ஏற்படும் பிரச்சினைகளும் விவரிப்பதற்கு நீண்டவை.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென தனியான - சரியான நிர்வாக கட்டமைப்பும் முறைமையும் ஏற்பாடுமில்லாததுதான் இத்தகைய குழப்பநிலைகளுக்கெல்லாம் அடிப்படை.


இவ்வளவு காலமும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்ததால் மாகாண நிர்வாகம் குறித்து அதிகம் கவனிக்கப்படவில்லை. இப்போது யுத்தநிறுத்த காலம். புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களுக்கான அடிப்படைக் கட்டுமானங்களை விரைந்து மேற்கொள்ளல் போன்றவை குறித்து சிந்திக்கப்படுகிறது; கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

இந்தவேளையிலும் அதே குழப்பகரமான மாகாண நிர்வாகம் இருந்தால் யுத்தத்தின் பின்னான காலத்திற்குரிய மீளமைப்பு நடவடிக்கைகளை துரிதகதியில் செய்ய முடியுமா? விடுதலைப் புலிகள் குறிப்பிடுவது போல ஊழலும், செயல்திறன் இன்மையும், நிர்வாகச் சீர்கேடுகளும் மிக்க ஒரு மாகாண நிர்வாகக் கட்டமைப்பால் உரிய இலக்குகளை அடையமுடியுமா?

எனவேதான் வடக்கு - கிழக்கிற்கு செயல்திறன் மிக்க இடைக்கால நிர்வாகம் அவசியம் என்று புலிகள் வற்புறுத்துகின்றார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகம் தொடர்பாக வெளியாகும் செய்திகளும், இப்பிரதேச மக்கள் கொண்டிருக்கும் கருத்துக்களும் புலிகளின் கோரிக்கையை நியாயப்படுத்துபவையாகவே உள்ளன.

## காலத்தின் பதிவு



நிம்மதிப் பெருமூச்சுடன்..... படம்: தீபன்

யாழ். பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையத்தினால் அண்மையில் செய்திப் புகைப்பட செயலமர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்கள் செயலமர்வின் இறுதிநாளன்று தீவகம், யாழ்.நகரில் முஸ்லிம்களின் பகுதி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பல புகைப்படங்களை எடுத்தனர். இயல்பான வாழ்க்கையையும் இயற்கையையும் பதிவுசெய்வனவாக அந்தப் புகைப்படங்கள் அமைந்தன. அவற்றில் இருந்து சில படங்கள் தொடர்ந்து இங்கே பிரசுரமாகவுள்ளன.

# குடாநாட்டில் அடுத்த ஆண்டில் சமுர்த்தித் திட்டம் முழுமையாகும்

### யாழ். உத்தியோகத்தர் சந்திப்பில் அமைச்சர் திஸாநாயக்க

காரைநகர்,ஒக்.11

யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஆண்டு முதல் சமுர்த்தித் திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என சமுர்த்தி மற்றும் விவசாய கால்நடை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த செவ்வாயன்று அமைச்சரை கொழும்பில் அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றத் தலைவர் எஸ்.சிறிதரன் தலைமையிலான 30பேர் அடங்கிய பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சமுர்த்தி அதிகார சபைப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, பொது முகாமையாளர் ஜே.ஆர் விஜயதிலக ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த மாதம் கொண்டுவரப்படும் வரவு - செலவு திட்டத்தின் மூலம் வடக்கு - கிழக்குப் பகுதியில் சமுர்த்தித் திட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வறிய நிலையில் இருக்கும் மக்களை மேம்படுத்துவதற்காகவே சமுர்த்தித் திட்டத்தினை ஆரம்பித்தோம். தென்னிலங்கை சிங்கள மக்களை விட கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவர்கள் யாழ். குடாநாட்டு மக்கள். அதேபோல் தென்னிலங்கை சகோதரர் களை விட துன்பங்கள் அனுபவித்தவர்கள் நீங்கள். ஆகவே நீங்கள் அனுபவித்த துன்பங்கள் அனைத்தும் உங்கள் வாழ்க் கைக்கு பெரிய சக்தியாக அமைந்துள்ளது. இதனை உணர்ந்து உங்கள் பகுதியைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு நீங்கள் முன்வரவேண்டும்.

அரசியல்வாதிகளின் சிபார்சின்பேரில் அன்று சமுர்த்தி நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இன்று அரசியல்வாதிகளுக்கு நீங்கள் உடன்படவேண்டிய அவசியம் இல்லை. வறிய மக்களை ஊக்குவிப்பதற்கே பிரதான இடம் கொடுக்கவேண்டும்.

நாட்டில் நிலையான சமாதானம் ஒன்று இன்று வரை ஏற்படவில்லை.சமாதானம் இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியாது. 1948இல் சுதந்திரம் அடையும்போது ஜப்பான், சிங்கப்பூர் என்பன நமது நாட்டின் நிலையிலேயே இருந்தன. ஆனால், இன்று அவை பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. நமது நாடும் அபிவிருத்தி அடைந்தால்தான் வறுமையை ஒழிக்கமுடியும்.

கடந்த 20வருடகால போரில் ஒருவரை ஒருவர் கொன்று குவிக்கும் தன்மையே காணப்பட்டது. யுத்தத்தின் மூலம் அதிகாரத்தினைப் பெறுவது என்பது சாத்தியமாகாத ஒன்று. சமாதானப் பேச்சுக்கள் மூலமே அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

முன்னைய அரசு வங்கிகள் மூலம் அதிக கடன்களைப் பெறறது. அத்துடன், ஊழியர் சேமலாப நிதி உட்பட அனைத்து நிதியையும் எடுத்து போருக்காக செலவு செய்தது. இதனால், ரூபாவின் மதிப்புக் குறைந்தது; வாழ்க்கைச் செலவு அதிகரித்தது.இதனால் நாடு படுகுழியில் தள்ளப்பட்ட நிலை உருவானது.



இதனால், நான் அரசில் இருந்து விலகினேன்.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பொருளாதாரத்தை உயர் நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றேன். பிரதமர் ஒன்றரை வருட காலத்தில் பொருளாதாரத்தை உயர்நிலைக்குக் கொண்டுவந்துள்ளார். இன்று அமைச்சர்களுக்கு கூட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளமே வழங்கப்படுகின்றது.

வரலாற்றில் இல்லாதவாறு கட்சிகளும் விடுதலைப் புலிகளும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். சமாதானம் இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. நிலையான சமாதானம் ஏற்பட்டதும் அபிவிருத்தி துரிதப்படுத்தப்படும்.

நிலையான சமாதானம் ஏற்பட்டதும் குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ள விவசாய நிலங்களில் கூட விவசாயிகள் சுதந்திரமாக தொழில் செய்யும் வாய்ப்பு ஏற்படும். இதற்கான சகல ஏற்பாடுகளையும் எனது அமைச்சு செய்து தரும்.

உங்கள் பகுதிகளுக்கு வந்து உங்களுடன் இருந்து வேலை செய்ய நாம் விரும்புகின்றோம். நான் பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது யாழ் குடாநாட்டைச் சேர்ந்த பலர் எனக்கு நண்பர்களாக இருந்தனர். ஆனால், எனது பிள்ளைகள்கூட இதுவரை யாழ்ப்பாணம் செல்லவில்லை. விரைவில் குடாநாட்டுக்கு வந்து உங்கள் பிரச்சினைகளை நேரில் ஆராய்வேன் என்றார்.

யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், கடமை நேரத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி திலகராசா ஜெகத்ஜெனனியின் குடும்பத்திற்கு 50ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் திசாநாயக்க இந்தச் சந்திப்பில் கூறினார்.(எ-73)

**நாளை**

**புரட்டாதி 25**
**ஞாயிற்றுக்கிழமை**
**(12.10.2003)**
**திதி : துதியை**
**பிற்பகல் 04.37 வரை.**
**நட்சத்திரம: அச்சுவினி**
**காலை 06.32வரை.**
**சுபநேரம்: 09.02 - 10.32**
**ராகுகாலம்: 04.32 - 06.02**
**(பழைய நேரப்படி)**

**உதயவாக்கு**

நாம் தாமதத்தை வெறுக்கிறோம். என்றாலும் அது நம்மை அறிவாளிகளாய் ஆக்குகிறது.

## 786 இலக்க பஸ்சேவை சீரில்லை எனப் புகார்

யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து நவாலி ஊடாக காரைநகர் நோக்கி மாலை நேரம் செல்லும் 786ஆம் இலக்க பஸ் சேவை கடந்த சில தினங்களாக சீரில்லை என பயணிகள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

சிலவேளைகளில் யாழ்நகரில் இருந்து மாலை 5.15, 6.00 ஆகிய நேரஅட்டவணையின் பிரகாரம் காரைநகரை நோக்கிப் புறப்படும் பஸ் தாமதமாகப் புறப்படுவதாகவும்.

இதனால், பயணிகள் உரியநேரத்தில் வீடுசெல்ல முடியாதுடன், பஸ்ஸுக்காக நீண்ட நேரம் வீதிகளில் தவம் கிடக்கவேண்டியிருப்பதாகவும் கூறப்பட்டது.

குறிப்பாக, யாழ். நகரப்பாடசாலைகளில் கல்விகற்கும் பாடசாலை மாணவர்கள் பஸ்சேவை சீரின்மையால் இரவு 7மணிக்கு வீடு செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட நேர அட்டவணைகளின் பிரகாரம் பஸ்சேவையை நடத்த காரைநகர் சாலையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

மழைகாலம் தொடங்கியுள்ளதை அடுத்து இதுவிடயத்தில் குறிப்பிட்ட சாலை நிர்வாகத்தினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த தேவதாஸ் தயாபரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.801284302V), விசேட அ.அ. (இல.0902000857), மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் என்பன மானிப்பாய்க்கும், சித்தன்கேணிக் குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வே.கோபாலன், 148, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (23495)

சபாரத்தினம் சந்திரசேகரம் என்பவருடைய தே.அ.அ. (இல.582800901X) பேர்ஸுடன் கடந்த 15.09.2003 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். சந்தை வீதி, இரண்டாம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.(சின்னமணி பத்தர்)(23485)

கோண்டாவில் மேற்கு, காளி கோயிலடியைச் சேர்ந்த சாந்தகுமார் ராகுலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட 'அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (23503)

சுழிபுரத்தைச் சேர்ந்த நடராஜா ரூபன் என்பவரின் கையடக்கத் தொலைபேசி (ERISSON) 07.10.2003 அன்று யாழ். (782) பஸ் தரிப்பிடத்திற்கும் சுழிபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 0602212355 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும. (23503)

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியில் 4½ பரப்புக்காணி, கிணறு, பயன்தரு மரங்களுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு:- S.அம்பிகைபாலன், நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (23422)

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு இல. 83, செம்மணி வீதியிலுள்ள 8 பரப்புக்காணி (தென்னைப் பிரயோசனங்களுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு பொ.பரமநாதன் 269, ஆ.வ.வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (23506)

## வீடு விற்பனைக்கு

ஞக்கா வீதி, யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் 3½ பரப்பு கிணறு, குளியல் அறை, வான் பயிர், பயன்தருமரங்கள் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு- ப.தேவகுமார், மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.(23254)

## வலை விற்பனைக்கு

4¾"x105x1000, 21 இளை 16 துண்டுகள் உடைய, சொற்ப காலம் பாவித்த வலை விற்பனைக்குண்டு. பார்வையிடுவதற்கு குஞ்சன்னா, வேம்படி, வல்வெட்டித்துறை. விற்பனை தொடர்புகளுக்கு: M.அரியம், 4ஆம் குறுக்குத் தெரு (Hostel முன்பாக), பருத்தித்துறை. (22815)

## வீடு, காணி விற்பனைக்கு

மருதனார்மடம், கே.கே.எஸ். வீதியில் வீடும் 14 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:-0777 - 678324. (C30601)

## இசைக் கருவிகள்

பாவித்த சிறிய ஓகன்கள் (Yamaha PSS 14, FK45) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.S.றஜீந்திரன், 75, கோவில் வீதி (நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தெற்கே). T.P.0777 031293. (23470)

## மணமகன் தேவை

இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்தராடம், கிரகபாவம் 39, டிசம்பர் 1970இல் பிறந்த, அரச தொழில் புரியும். பட்டதாரி மணமகளுக்கு படித்த, நற்பண்புள்ள, உள்ளூரில் அரச/தனியா தொழில்புரியும் மணமகன் தேவை. விள.இல.2067,மே/பா உதயன். (23501)

## புறொயிலர் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: K.சிவரஞ்சன் (ரஞ்சன்), சிவன்கோவிலடி, சாவகச்சேரி. (23490)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் 1Kg-140/= சுத்தம் செய்தல் இலவசம். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் லயன் பொம்மேரியன் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (23447)

## இசைக் குறிப்புகள்

ஓகன், வீணை, கிற்றார், வயலின போன்ற இசைக்கருவிகளுக்கான பக்திப் பாடல்கள், சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் பாகம்15 வரை வெளிவந்துள்ளன. 75, கோவில் வீதி, நல்லூர்.T.P.0777 031293.பதிவுத் தபாலிலும்பெறலாம். (23469)

## திருமண சேவை

1974, புநர்பூசம், செவ்வாய்7, பாவம்17, France மணமகனுக்கு அழகான, மெய்யீய மணப்பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்புகொள்க: துரை விமலா, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (23496)

**யாழ்-கொழும்பு போக்குவரத்து சேவை**

தினசரி யாழ்-கொழும்பு பயணிகள் வான் சேவையும் (பயணிகள் கட்டணம் 900/=) லொறியில் பொருட்கள் அனுப்பும் சேவைகளை நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஒழுங்குபடுத்தலாம்

விஜயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்

| | |
|---|---|
| கொடிகாமம் வீதி, நெல்லியடி<br>021-226-3500<br>0777-271478 | கொட்டாஞ்சேனை கொழும்பு - 13<br>01-2478444<br>01-2478443 |

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுக்காக | விண்ணுக்காக |
|---|---|
| 01 | 03 |
| 03 | 10 |
| 1939 | 2001 |



வடஇலங்கை சர்வோதய அமைப்பாளரும், பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க ஆரம்பகால தலைவருமாகிய தொண்டர்

## கந்தையா திருநாவுக்கரசு

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் - மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் - என்னால்
தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும் என
இறுதி மூச்சுவரை வாழ்ந்து காட்டி விட்டுச் சென்ற
எம் தந்தையே! நீங்கள் மறைந்து ஈராண்டுசென்றாலும்
உங்கள் பாதையில் என்றென்றும் எங்கள் பணி தொடரும்
உங்கள் ஆத்மா சிவயோக சுவாமிகளின் திருவடியில்
மகிழ்ந்திருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வடஇலங்கை சர்வோதயம்,
சர்வோதய சேவை வளாகம்,
புங்குடுதீவு -3. (23494) (25-12-15) - சர்வோதய குடும்பத்தினர்.

## கிராம அபிவிருத்திச் சங்க விவரம் சேகரிப்பு

வலி.மேற்கு,ஒக்.11

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் விவரங்கள் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக, வடக்கு -கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பதில் பணிப்பாளர் இ.இளங்கோவன் சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சுற்றறிக்கையொன்றினை அனுப்பிவைத்துள்ளார். (எ-175)

## சுயதொழில் முயற்சிக்கு உதவி

வலி.மேற்கு,ஒக்.11

அராலி மேற்கு, பனிப்புலம், சுழிபுரம் கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த 35 விதவைகளுக்கு சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் வலி.மேற்கு பிரதேச செயலகத்துக்கு வழங்கிய நிதியைப் பயன்படுத்தி இந்த சுழற்சி முறைக்கடன் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

இந்நிதி மூலம் ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபாவை கால்நடை வளர்ப்புக்கு கடனாக வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-175)

## டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். பல்கலைக்கழக பொது நிர்வாக பட்டப்பின் டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-185)

## விவசாயிகளுக்கு உதவிகள்

வலி.மேற்கு,ஒக்.11

அராலி, மூளாய், சுழிபுரம், தொல்புரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 738 விவசாயிகளுக்கு 'மூவ்மொண்டோ' நிறுவனத்தினர் மண் வெட்டி, உரம், விதைநெல் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

பெரும்போக நெற்செய்கை ஆரம்பித்துள்ள இவ்வேளை இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-175)

## கருத்தரங்கு

வலி.வடக்கு,ஒக்.11

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

கிராம அலுவலர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கென மட்டுப்படுத்திய அளவில் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் பெண்கள், சிறுவர்கள் மற்றும் முதியோர்களின் துஷ்பிரயோகம், அவர்களின் உரிமைகளைப் பேணுதல் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (எ-86)

## மொழிப்புலமை ஊக்குவிப்பு கிடைக்கும்

தம்பலகாமம்,ஒக்.11

வடக்கு - கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்கான மொழிப் புலமைப பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதை அடுத்து அவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.

இந்த ஊக்குவிப்புப்படி கடந்த 2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து நிலுவையாக வழங்கப்படும் என மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ-9-198)

**SKY Computer Systems**

புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| M.S. Office | 3 Months |
| Auto Cad | 3 Months |
| Hard Ware | 6 Months |
| Financial Planning Using Excel | 1 Month |

Note: (1) ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியான முறையில் கண்காணிக்கப்படும்.
(2) உங்களுக்கு வசதியான நேரத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக்காரியாலயத்தில இருந்து பெற்றுத்தரப்படும். 15,000/= இல் இருந்து கணனிகளை பெற்றுக்கொள்ளலாம். மொனிட்டர் 15" - 6000/=

**SKY Computer System**
109, Kandy Road, Chundikuli, Jaffna (கச்சேரிக்கு அருகில்).
Today You Learn Tomorrow You Lead.
(C30528) (25-12-15)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய உறுப்பினர்களான
**பகீரதன், ஞானரதன்** ஆகியோரின் அன்புப் பேர்த்தியார்

## திருமதி தம்பையா யோகரத்தினம்

அவர்களின் மறைவு குறித்த 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினரும், விளையாட்டுக் கழகத்தினரும்.

(23502) (25-12-15)

# நன்றியும் பாராட்டும்

**கடந்த வேலைநிறுத்தக் காலப்பகுதியில் இவ்வைத்தியசாலையில் ஊழியர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு சென ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர் நிறுவனம், எமக்கு போதுமான அளவு தொண்டரைத் தந்து உதவி செய்தமையால் எமது வைத்திய சேவையின் அவசர சிகிச்சைப் பிரிவுகளை இயங்க வைக்கக் கூடியதாக இருந்தது. இச்சேவைக்காக அத்தொண்டர்களுக்கும், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர் நிறுவனத்திற்கும் எனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(25-12-15) C-30639

# கண்ணீர் அஞ்சலி



## மஹா வித்துவான் பிரம்மஸ்ரீ
## மா.த.ந.வீரமணி ஐயர்

எம்.ஏ.
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்களின் திடீர்மறைவு வாழ்வகப் பிள்ளைகளுக்கும் வாழ்வக சமூகத்திற்கும் மிகுந்த கவலையைத் தருகிறது. அன்னார் வாழ்வக முன்னேற்றம் கருதி எந்த நேரமும் எப்பொழுது கேட்டாலும் மறுக்காமல் பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்தவர். வாழ்வக கீதம் இயற்றி இசையமைத்து வாழ்வகத்தை மனமார வாழ்த்தியவர். அந்தப் பெருந்தகையின் இழப்பு தமிழ் சமுதாயத்திற்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் திருவடிகளில் எமது கண்ணீர் மழையைத் காணிக்கையாக் குவதுடன், அவரது பிரிவால் மிக வருந்தும் மனைவி, குடும்பத்தினர் அனைவரது கவலையிலும் நாமும் பங்குகொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இணுவில் கந்தனை வேண்டி நிற்கிறோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"வாழ்வகம்"
விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம். - வாழ்வக குடும்பம்.

(23498) (25-12-15)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1905 | 2003 |
| 12 | 09 |
| 05 | 11 |



## திருமதி யோகரத்தினம் தம்பையா (மம்மி)

வாழ்வாங்கு வாழ்ந்து
வளமான வாழ்வு தந்து
பாசமாய் நேசமாய்
பண்புடனே அனைவரையும்
அன்புடனே அரவணைத்து
ஆதரித்த மம்மி!
வந்த மருமக்களை தம்
மக்களாய் மதித்து
துன்பங்கள் போக்கி
துணையாக நின்ற மம்மி!
பேரப் பூட்டப் பிள்ளைகள் எல்லாம்
நல்ல பெயரெடுக்க வேண்டுமென
நேர்த்திக் கடன்கள் எல்லாம்
நிறையச் செய்த மம்மி!
"மம்மி! மம்மி" என
மக்கள் எல்லாம் கதறியழ
மலர்ந்த முகத்துடனே
மறைந்த விதம் என்ன மம்மி?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (23500) (25-12-15)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மீளக்குடியமரும் மக்களுக்கு உடனடி உதவிகள் கிடைப்பதில் இடைவெளி

**ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியடைகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இரு தரப்புகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது.**

**இக்காலப் பகுதியில் நடந்தவைகள் என்ன, அவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரத்தைத் தந்தன என்பன பற்றிய கருத்துக்களை தாங்கி வரும் செவ்விக்களம் இது.**

**யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனின் செவ்வி இன்று வெளியாகின்றது. பலரது செவ்விகள் இந்தப் பகுதியில் தொடராக வெளிவரவிருக்கின்றன.**



*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் குடாநாட்டில் மக்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்குவந்தபின் சுமார் 47 ஆயிரம் குடும்பங்கள் யாழ். குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துள்ளன. உள்ளூரில் இடம்பெயர்ந்த 15ஆயிரம் குடும்பங்கள் குடாநாட்டுக்குள்ளேயே தமது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளனர். 30ஆயிரம் மக்கள் வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு வருகை தந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து வந்துள்ளனர். அவர்களில் அதிகமானோர் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்துள்ளனர்.

அதைவிட குடாநாட்டில் சேதமடைந்த வீடுகளை மக்கள் தாமாகவே புனரமைத்துள்ளனர். தனியார் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் பல தமது தொழிற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. இது ஒரு முன்னேற்றகரமான செயற்பாடு என்றுதான் கருதுகிறேன்.

விவசாயத்துறையில் பாரியளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாது இருந்த விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்புக் கிட்டியுள்ளது. வெங்காயம், மரக்கறி, வாழைப்பழம் போன்றவை தம்புள்ள சந்தைக்கு அனுப்பப்படுகின்றன.

இநத மாவட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு உதவ பல சர்வதேச நிறுவனங்கள் இங்கு வந்துள்ளன.

கடற்றொழிலில் பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இன்னமும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்ற போதிலும் கடற்பொருள்களின் உற்பத்தி அதிகரித்துக்கொண்டு போகின்றது. இதுதான் இந்திய ட்றோலர்களால் ஏற்படும் முரண்பாடுகளுக்குக் காரணம். உடன்படிக்கை ஏற்பட முன்னர் இந்திய ட்றோலர்கள் எமது பிரதேசத்துக்குள் மீன்பிடித்துக்கொண்டிருந்தன. 84ஆம் ஆண்டில் இருந்து மீன்பிடித்தடை இருந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் மீன்பிடிக்கு ஓரளவு வசதி செய்யப்பட்ட போதும், இந்திய ட்றோலர்கள் எமது பிரதேசத்துக்குள் மீன்பிடித்துக்கொண்டுதான் இருந்தன.

இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க தற்சமயம் ஓரளவு அனுமதிக்கப்பட்டுள்ளதால் முரண்பாடுகள் மீண்டும் தலையெடுத்துள்ளன.

இங்கு நிலைமை மாற்றமடைவதால் இந்தியாவில் இருந்து ஈழ அகதிகள் குடாநாட்டுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். இதுவரை 536 குடும்பங்கள் இங்கு திரும்பியுள்ளன.

கைத்தொழில் துறையில் பாரிய முன்னேற்றம காணப்படவில்லை. காங்கேசனதுறை சிமெந்துத் தொழிற்சாலைதான் குடாநாட்டில் இருந்த பாரிய கைத்தொழில் நிறுவனமாகும். அத்துடன் சிறுசிறு கைத்தொழில் நிறுவனங்கள் இயங்கின. கடந்தகால அனர்த்தங்களால் அந்த நிறுவனங்கள் யாவும் முடக்கப்பட்டுள்ளன. சிறுசிறு கைத்தொழில்கள் இப்போது புத்துயிர் பெறுகின்றன. பனை சார்ந்த கைத்தொழில்கள் வீடுகளில் நடக்கின்றன.

விவசாய உற்பத்திகளைப் பதப்படுத்தி, பொதிசெய்து சந்தைவாய்ப்பை உருவாக்க வேண்டும். ஆனால், அது தொடர்பான தொழில்நுட்பம் இன்னமும் இங்கு வரவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கைத்தொழில் கண்காட்சியில் சில நவீன தொழில்நுட்பம் சார்ந்த கைத்தொழில் தொடர்பான காட்சியகங்கள் இருந்தன. இது வரவேற்கத்தக்கது. இந்தத் தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய மூலதனத்தை வழங்கக்கூடிய நிதி நிறுவனங்கள் இங்கு இல்லை.

*கேள்வி:* வங்கிகள் இந்த விடயத்தில் எந்த வகையில் பங்களிப்பை வழங்கலாம் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* யாழ். மாவட்ட மக்களைக் கவர்ந்த வங்கிகள் இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும்தான். அந்த வங்கிகள் இந்தத்துறையை அபிவிருத்தி செய்ய மக்களை நோக்கி இன்னமும் செல்லவில்லை என்பதுதான் பாரிய குற்றச்சாட்டு. இத்துறைக்கு உதவக்கூடியன தனியார் வங்கிகள்தான். அந்த வங்கிகள் கிளைகளை உருவாக்கி கைத்தொழில், விவசாய உற்பத்தியாளர்களை அணுகுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதை ஒரு நல்ல சகுனமாகத்தான் கருதவேண்டும்.

*கேள்வி:* தெற்கு வர்த்தகர்களின் சந்தையாக யாழ்ப்பாணம் உருவாகியுள்ளது போன்று யாழ். வர்த்தகத்தின் சந்தையாக தென்பகுதி மாற்றம்பெற எந்த வகையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* யாழ்ப்பாணத்திற்கான சந்தை இரணடு, மூன்று விதமாக அமைந்துள்ளது. கடந்த 20, 25 வருட காலமாக தெற்கில் உணவுப் பழக்கங்களில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. பதனிடப்பட்ட உணவுகளை உண்ணுதல், சுத்தமாக சந்தைப்படுத்தப்படும் பொருள்களில் அக்கறை காட்டுதல் ஆகியன மக்களிடையே கூடுதலாகப் பரவியுள்ளது. இதன் காரணமாக அந்தப் பொருள்களின் வருகை இங்கு அதிகரித்துள்ளது.

கட்டடப்பொருள்களின் சந்தையாகவும் யாழ்ப்பாணம் மாறியுள்ளது. முக்கியமாக மரம். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் மரங்கள் உடனடியாக இங்கு கொண்டுவரப்படுகின்றன. முன்னர் வன்னி மாவட்டத்தில் இருந்து எமது தேவைக்கான மரங்களைப் பெற்றுவந்தோம். வன்னியில் மரங்கள் வெட்டத் தடைவிதிக்கப்படடதன் காரணத்தால் தெற்கில் இருந்து மரம் கொண்டுவரப்படுகின்றது. இந்த மரத்துக்கு எந்த வித வரியையும் விடுதலைப் புலிகள் விதிக்காததால், கூடுதலான மரங்கள் இங்கு எடுத்துவரப் படுகின்றன.

**செவ்வி கண்டவர்:**
**குகா**

முன்னர் வன்னியில் இருந்து பெற்ற மரங்களுடன் பனை மரங்களையும் வெட்டி எமது தேவைகளைப் பூர்த்தி செய்தோம். குடாநாட்டில் 7 அல்லது 8லட்சம் பனைமரங்கள் அழிக்கப்பட்டதால், தொடர்ந்தும் நாம் பனை மரங்களை வெட்டக்கூடிய சூழ்நிலை இங்கு இல்லை.

குடாநாட்டில் 13 ஆயிரம் வீடுகள் பூரணமாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வீடுகளை மளப் புனரமைக்க மரம் அவசியம் தேவையாக இருக்கின்றது.

தெற்கில் இருப்பதுபோல் இங்கும் தென்னை மரங்களைக் கட்டடத் தேவைக்குப் பயன்படுத்த ஊக்கமளிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

தெற்கு மாகாணத்தின் சந்தையாக யாழ்ப்பாணம் உருவாகியிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். தெற்கு மாகாணத்தில் கூடுதலாக விற்பனை செய்யக்கூடிய பொருள்களாக பழங்களைத்தான் நாம் எடுக்கவேண்டும். அந்தப் பழங்களை நவீன முறையில் பதனிட்டு பொதி செய்து தெற்குக்கு மட்டுமல்ல வெளிநாடுச் சந்தைகளுக்கும் அனுப்பமுடியும். யாழ்ப்பாண மாம்பழம், யாழ்ப்பாண வாழைப்பழம் என பிரபல்யப்படுத்தவேண்டும். இந்தத் துறையில் தனியார்தான் ஈடுபடவேண்டும். அரசதுறை இதற்கான ஆலோசனைகளை மட்டுமே வழங்கமுடியும்.

*கேள்வி:* குடாநாட்டில் மீளக்குடியமரத் திரும்பிய மக்களுக்கு போதிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளனவா?

*பதில்:* ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் குடாநாட்டுக்கு மக்கள் வருவார்கள் என்ற கணக்கு அரசுக்குத் தெரிந்தபோதும் அதற்கான வளத்தை அரசு எமக்குத் தரவில்லை. அதற்கான முயற்சியையும் எடுக்கவில்லை.

இந்த ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு உதவிகளைப் பெற்று இதைச் செய்யலாம் என அரசு நினைத்தது. இரண்டையும் ஒன்றாகச் செய்யலாம். என எண்ணியிருக்கலாம். மீளக்குடியமரும் மக்களுக்கு நாம் செய்யவேண்டியது மனிதாபிமான உதவிகளாகும். மனிதாபிமான உதவிகளில் உணவு, இருப்பிடம், குடிதண்ணீர், சுகாதாரம், கல்வி ஆகியன அடங்கும். இதில் உலர் உணவு தொடர்ந்து வழங்கப்படுகின்றது.

## சமாதானம் ஸ்திரப்படாவிட்டால் வெளிநாட்டு உதவி கிட்டாது!

குடிதண்ணீர் பிரச்சினையும் இல்லை. ஏனையவற்றில் பிரச்சினைகள் உள்ளன. சுகாதார நிலையங்கள் புனரமைக்கப்படவில்லை. பாடசாலைகளும் பாரிய அளவில் புனரமைக்கப்படவில்லை. வீடுகளைத் திருத்திக்கொடுக்கமுடியவில்லை.

இதன் காரணமாக நீண்டதோர் இடைவெளி ஏற்பட்டுவிட்டது. அரசின் நிதி உதவிக்கும் மக்கள் வந்த காலத்துக்கும் இடையில் பாரிய வித்தியாசம் ஒன்று ஏற்பட்டுவிட்டது.

உலகில் எந்த நாட்டிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி வழங்குவது வழக்கம். வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக இந்தக் கால தாமதம் நீடித்துக்கொண்டிருக்கிறது.

வடமாகாண அரச அதிபர்கள் அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்ததன் காரணமாக மீளக்குடியமர்ந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்க முடிவு செய்யப்பட்டது. இது நல்ல முடிவு.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 46 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்தன. அவர்களில் 2ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் மாதவருமானம் பெறும் 5 ஆயிரம் குடும்பங்கள் போக, எஞ்சிய குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கத் திட்டமிடப்பட்டது. அதற்கான முழு நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. அதற்கு எமக்குத்தேவை ஆயிரம் கோடி ரூபா. இதுவரை எமக்கு 9ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கக்கூடிய நிதியே கிடைத்துள்ளது. பணம் வருவதில் உள்ள தடைதான் காலதாமதத்துக்குக் காரணம்.

இதனால் எமது நிர்வாகம் பாரிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. மக்கள் எதுவும் செய்ய முடியாது மரங்களுக்குக் கீழ் வாழ்கிறார்கள். வாய்க்கால்கள் திருத்தம் செய்யாததால் நோய்த்தாக்கமும் எதிர் நோக்கப்படுகிறது.

கொடுப்பனவுக்காக கையொப்பம் பெற்றுவிட்டு, கொடுப்பனவு செய்யாமல் இருப்பதால், மக்கள் எம்மீது சந்தேகம் கொள்கிறார்கள். நாங்கள் இந்தப் பணத்தை கைமோசடி செய்துவிட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். அப்படி ஏதும் நடக்கவில்லை என்று உறுதி கூறுகின்றோம். மக்களுக்கான கொடுப்பனவை வங்கிகள் மூலம் செய்கிறோம். நிதி வந்து சேரச்சேர கொடுப்பனவை தொடர்ந்து செய்வோம். வீடமைப்பதில் பாரிய பிரச்சினை உள்ளது.

அரசு 75ஆயிரம் ரூபா வழங்க முடிவுசெய்தது. டோக்கியோவில் நடந்த உதவிவழங்கும் மாநாட்டுக்கு முன்பு சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகள் இங்கு வந்து உடனடித் தேவைகளை அறிந்து சென்றனர். சமாதான சூழ்நிலை நிரந்தரமாகாமல், வீடமைப்பு நிதியை எவரும் தர முன் வருகிறார்கள் இல்லை.

குடாநாட்டில் 525 வீடுகளைப் புனரமைக்க உதவியாக 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதைவிட வேறு உதவிகள் கிடைக்கவில்லை. இந்த விடயத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களையே நாம் நம்பியிருக்கிறோம்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மூலம் கிடைத்த 12 கோடி 20 லட்சம் ரூபா நிதியில் 8 கோடி ரூபாவை வீடமைப்புப் பணிகளுக்கு செலவிட்டுள்ளோம். வேறுவேறு நிறுவனங்களும் வீடமைக்க உதவியுள்ளன. சுமார் 7 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மட்டும் தற்காலிக இருப்பிடவசதி செய்துகொடுத்துள்ளோம். அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், இந்துகலாசார அமைச்சு ஆகியன வீடமைப்புக்கு உதவியுள்ளன.

மேலும் குடும்பங்கள் இங்கு வந்துசேரும் என எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டில் 7 ஆயிரத்து 500 குடும்பங்கள் இங்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் பட்சத்தில் குடாநாட்டில் சுமார் 5ஆயிரம் குடும்பங்களை இராணுவம் மீளக்குடியமர அனுமதிக்கலாம் எனக் கருதுகிறோம். வலிகாமம் வடக்கு அல்லது அரியாலை அல்லது பொன்னாலைப் பகுதியில் இந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படலாம் என நாம் கருதுகிறோம். இல்லாவிட்டால் பேச்சுக்கள் பலன் அற்றவையாகப் போய்விடும். முஸ்லிம் மக்களிலும் சுமார் 500 குடும்பங்கள் இங்கு குடிவரலாம்.

7ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு இருப்பிட வசதி செய்யவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இதற்கான நிதிவளத்தைத் தேடுவது தான் எம்முன் உள்ள பிரச்சினையாகும்.

அடுத்த வருடம் மொத்தம் 25ஆயிரம் குடும்பங்களுக்கு இருப்பிட வசதி செய்யவேண்டி இருக்கும். இது எமக்கு பாரிய பிரச்சினையாக உள்ளது.

*கேள்வி:* குடாநாட்டில் மொத்தம் எத்தனை வீடுகள் சேதமடைந்துள்ளன?

*பதில்:* அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் வீடுகளின் சேதங்களை மதிப்பிட முடியாத நிலை உள்ளது. அந்தப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் 22ஆயிரம் வீடுகளில் மக்கள் வாழமுடியாத நிலை உள்ளது. மொத்தமாக 33 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீடுகளைப் புனரமைக்க 250 கோடி ரூபா தேவை. அரசின் உதவியாக கிடைக்கும் 75 ஆயிரம் ரூபா என்ற (10ஆம் பக்கம் பார்க்க)

**குடாநாட்டில் நிலவும் வன்முறைக் கலாசாரம் சமூகத்தில் பாரிய அளவு பாதிப்பை ஏற்படுத்துவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அரச ஊழியர்களின் அசமந்தப்போக்குப் போன்றே இளைஞர்களும் சட்டம் ஒழுங்கை; சமுதாயக் கட்டுப்பாட்டைப் பேணும் முறையில் இருந்து விலகிவிட்டார்கள். வெளிநாடுகளில் இருந்துவரும் நிதிப் பாய்ச்சல் காரணமாக அவர்களது பொருளாதார நிலை மாறிக்கொண்டு வருகின்றது. இது ஏற்றுக்கொள்ள முடியாத கலாசாரங்களை, மதுபாவனை, பெரியோர்களை மதிக்காமை போன்றவற்றை வளர்த்து அவர்கள் சமூகத்தில் இருந்து வேறொரு திசையை நோக்கிப் போவதையே காணமுடிகின்றது. யாழ். மாவட்டத்தில் இந்நிலைமை பெரிய அளவில் தோன்றியுள்ளது.**

**சட்டம், ஒழுங்கை சரிவர நிலைநாட்டுவதுதான் இதற்கு சரியான பங்காக இருக்கும் என நான் கருதுகிறேன்.**

**மனோதத்துவ ரீதியாகவும் இதைப் பார்க்கவேண்டும். வேலைவாய்ப்பு இன்மையும் இதற்கு ஒரு காரணமாக அமையலாம்.**




ஆற்றலைக் காட்ட
மாற்றத்தை நாடுங்கள்!
HINODE
POZZOLANA
கட்டிடத் தொழிலில் புரட்சிகரமான அறிமுகம்
ஹினோடே போசோலானா
ஹினோடே போசோலானா சீமெந்து கொங்கிறீட்டுக்கு அதிவிசேடமான தரமுயர்ந்த சீமெந்து வகையாகும். கொங்கிறீட் வேலைகளுக்கு ஹினோடே போசோலானா சீமெந்தைப் பாவிப்பதன் மூலம் ஏராளம் நன்மைகள் பெறலாம்.
ஹினோடே போசோலானா சீமெந்து இன்று திருகோணமலையிலுள்ள டோக்கியோ சீமெந்துத் தொழிற்சாலையில் மாண்புமிகு வர்த்தக மற்றும் பாவனையாளர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்களினால் வைபவரீதியாக அறிமுகம் செய்துவைக்கப்படும்.
நீடித்திருக்கும். வெடிப்புக்கள், சிதைவுகள் ஏற்படாது.
வலிமையில் ஒப்பற்றது.
கொங்கிறீட் கலப்பதற்கு அரித்தெடுக்கத் தேவையில்லை.
கடற்கரைப் பிரதேசத்திற்கும் உகந்தது.
சுற்றாடலுக்குத் தீங்கிழைக்காது.
ஒரு bag இல் அதிகளவு கொங்கிறீட் கலக்கலாம்.
HINODE
POZZOLANA
SLS
டோக்கியோ சீமெந்து கூட்டு நிறுவனம்
சீமெந்து என்றால் ஹினோடே போசோலானா

# இந்திய சினிமா ஏற்படுத்தும் சீரழிவுகள் எமது சமூகத்தில் ஒரு நாட்பட்ட நோய்

**உலக உளநல நாளை ஒட்டி நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.**

அதிர்ஷ்டவசமாக எங்களது இளையவர்கள் பலர் இன்னமும் சிறப்பான ஒரு நிலையிலேயே இருக்கின்றனர். யுத்தத்தால் சீரழிந்துபோன பல நாட்டு உதாரணங்களைப் பார்க்கும்பொழுது நாங்கள் இன்னமும் நம்பிக்கையளிக்கக்கூடிய வளங்களோடும, கலாசாரத்தோடும்தான் இருக்கிறோம் என்பது நிம்மதியான ஒரு விடயம். போதைவஸ்துப் பாவனை எம்மில் வேரூன்றாமல் நாங்கள் மிக விழிப்பாகவே இருக்கிறோம். இது ஒரு பலமான நிலைமையாகும். எனவே இந்தப் பலமான நிலையிலிருந்து, தற்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையினை விளங்கிக்கொள்வதுடன் (பழிபோடுவதை விடுத்து), அதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தேவையாகின்றது. இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலே பார்த்த மாதிரி, அது இந்தக் காலத்தின் தேவையாகின்றது. துறைசார் நிபுணர்களும், வாழ்வியல் அனுபவம் மிக்கோரும் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டிய தேவையுள்ளது. ஏனென்றால், தற்பொழுது வெளிக்கிளம்பும் உதாரணங்கள் இன்னும் சில காலத்தில் ஏற்படக்கூடிய சமூகச் சிதைவுக்கான அபாயமணிகளாகத்தான் கொள்ளப்பட வேண்டும்.

இளையவர்களில் மாற்றம் தேவைப்படுகின்ற பண்புகள் எவை என்பது கண்டறியப்படவேண்டும். இந்த மாற்றங்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பது பற்றித் திட்டமிடல் வேண்டும். இனி உருவாகின்ற இளைஞர்களை எவ்வாறு சிறந்த பண்புடையவர்களாக உருவாக்குவது என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும். மேலாக இவை யாவும் வளர்ந்தோரால் நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும்.

இந்த மாற்றங்கள் உருவாகுவதற்கு அல்லது அவற்றை உருவாக்குவதற்கு சமூகத்தினுடைய பல மட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். வீட்டில் பெற்றோர் தொடக்கம், பாடசாலைச் சூழல், கல்வி முறை, சமூகச் சிந்தனையோட்டம், அரசியல் சித்தாந்தம் என்பன வரைக்கும் இது தொடர்பான கரிசனையுடன் கூடிய மாறுதல்கள், போக்குகள் உருவாகி வரவேண்டும். இவற்றில் சிலவற்றைப்பற்றித் தொடர்ந்து நோக்குவோம்.

இளைஞர்களது சிந்தனையோட்டத்திற்கும் நடத்தைகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களின் இயக்கப்பாடுகளும், பிள்ளை வளர்ப்பு முறைகளும், பெற்றோர் - பிள்ளைகளிடையே இருக்கின்ற உறவுமுறையும் கணிசமானளவு பங்கு வகிக்கின்றன. சிறு வயதில் ஏற்படுகின்ற நல்லனுபவங்களும், தாக்கங்களும் இளைஞர்களின் ஆளுமையுருவாக்கத்தில் பங்குவகிப்பது நாம் அறிந்ததே. பெற்றோரும், வளர்ந்த உறவினர்களும் சிறுவர்களுக்குப் பாத்திரமாதிரிகளாகி சிறுவர்கள் வளரும்போது அவர்களைப் பின்பற்ற எத்தனிப்பதுவும் நாம் அறிந்ததே. குடும்பங்களின் சிதைவுகள், சச்சரவுகள், பிணக்குகள், அடிதடிகள், மதுபாவனை போன்றவையும், நோய்வாய்ப்பட்ட பெற்றோர் ஒற்றைப் பெற்றோருடைய குடும்பங்களும், அதிகாரப் பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகமுடைய குடும்பங்களும் ஆரோக்கியமான இளைஞர்களை உருவாக்கத் துணைபோகா. ஒளிவு மறைவற்ற உரையாடல்களும், தட்டிக்கொடுக்கும்போக்கும், மிதமான எல்லைப் படுத்தல்களும் உடைய குடும்ப இயக்கப்பாடுகளும் பெற்றோரின் நன்னடத்தைகளுமே பிள்ளைகளை ஆரோக்கியமான இளைஞர்களாக உருவாக்குகின்றன.

எங்களது சமூகத்தில் பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைக்குப் போகின்றார்கள். நித்திரை கொள்ளும் நேரத்தைத் தவிர்த்தால் அவர்கள் வீட்டில் இருக்கின்ற நேரமளவிற்குப் பாடசாலையிலும் இருக்கின்றார்கள். சிறுவர்கள் பாடசாலையிலேயே பல விடயங்களைப் பாடத்திற்குப் புறம்பாகவும் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் - குறிப்பாக ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியர் வாக்கே வேதவாக்காகின்றது. எனவே, நல்லதொரு சமூகத்தை உருவாக்குவதற்குப் பாடசாலைச் சூழலைப்போல ஓர் உகந்த சூழல் வேறில்லை எனலாம். இதற்குக் கல்வி முறையில் மாற்றம் அவசியமாகிறது. பாடத்திட்ட மாற்றங்களையும்விட, கற்பிக்கும் முறையில் மாற்றம் தேவைப்படுகின்றது. மாணவர்களை சுயசிந்தனையுடையவர்களாக, ஆக்கத்திறன் மிக்கவர்களாக குழுவுணர்வு உடையவர்களாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு எடுக்கக்கூடியவர்களாக, ஏமாற்றங்களைத் தாங்கக்கூடியவர்களாக உருவாக்கவேண்டும். மேலும் மனித விழுமியங்கள், சமூக நியமங்கள், பொதுவான ஒழுங்குமுறைகள், பழக்க வழக்கங்கள் என்பன ஆரம்ப வகுப்புகளிலிருந்தே போதிக்கப்படுவதோடு, ஆசிரியர்களும், பெற்றோரும் அதற்கேற்பத் தாங்களும் நடந்துகொள்ள வேண்டும். இல்லாதுவிடின் சிறுவர்கள் தாம்படிப்பதற்கும், யதார்த்தத்தைப் பார்ப்பதற்கும் இடையில் ஒரு முரண்பாட்டை உணர்ந்து குழம்பிப் போவார்கள்.

இளைஞர்களின் சிந்தனையோட்டத்தையும், நடத்தைகளையும் சீராக்குவதில் மத நிறுவனங்கள், சங்கங்கள், பல்வேறுவிதமான குழுக்கள் போன்ற சமூக நிறுவனங்களின் பங்கு முக்கியமானது இளைஞர்கள் பொதுவாகவே துடிதுடிப்பு மிக்கவர்களாகவும், சாதிக்கவேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களாகவும் நேர்மை, அர்ப்பணிக்கும் திறன் உடையவர்களாகவும் இருப்பதனால், இவ்வாறான அமைப்புக்கள் இளைஞர்களை அணைத்து அவர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுத்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம். இதன்மூலம் அவர்களது சக்தி நல்லமுறையில் வெளிப்பட வழி பிறக்கிறது. மேலும் இவ்வாறான அமைப்புக்களில் பங்கேற்பதால் அவர்களது ஆளுமைப் பண்புகளை வளர்க்கவும் முடிகிறது. துரதிர்ஷ்டவசமாக, கடந்த இரு தசாப்தங்களில், இவ்வாறான அமைப்புகள் சிதைந்து, அழிந்துபோய்விட்டன. இருக்கின்ற பல அமைப்புகளும் பணத்தேவை, அரசியல் தேவைகளுக்காக, தங்களது சுயமிழந்து, வேறுயாரோ தீர்மானிப்பதை நடைமுறைப்படுத்தும் உப முகவர்களாகிவிட்டன. எல்லாவற்றையும் விட பொய்த்திட்டமிடலும், கணக்கு வழக்குகளைச் சரிசெய்தலும், தலைமைப்பீடத்திற்கு எதிராகச் செயற்பட்டு குழப்பி, ஆனால் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயாரில்லாத போக்கும் இன்று பல சமூக நிறுவனங்களில் காணப்படுகின்றன. இளைஞர்கள் சந்தேகத்திற்கிடமின்றி இவற்றைக் காணுகிறார்கள். இதற்கூடாக, பிழையானவழி (முறைகளை) கற்றுக்கொள்ளுகிறார்கள். இது எமக்கு நேர்ந்திருக்கின்ற ஓர் அவலமான நிலையாகும்.

**ஊடகங்களின் பங்கு**

ஒரு சமூகத்தின் மீது வெகுசனத் தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு அளப்பரியது. வரலாற்றிலே சமூக மாற்றத்தை விரும்பிய பல தனிப்பட்டவர்களும், அமைப்பினரும் வெகுசன ஊடகங்களை 'மிகச் சரியான முறையிற், கையாண்டு வெற்றி பெற்றுள்ளனர். எனவே விடயங்களைப் பெரிதுபடுத்துவதிலும், அவற்றைக் கவர்ச்சிகரமாக அளிக்கை செய்வதிலும் தொடர்புசாதனங்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். இளையவயதில் எழக்கூடிய ஒரு குணாதிசயம், பிரபல்யமாக வருவது ஆகும். ஒரு தவறான விடயத்தைப் பிரபல்யப்படுத்துவது, நாங்கள் நினைப்பதைவிட எதிர்மறையான விளைவுகளையே கொண்டுவருவது அவதானிக்கப்பட்டுள்ளது. சமூகப் பிறழ்வு நடத்தைகளை வெளிக்கொணரும்போது, ஒரு புறத்தில் 'இது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்' என்கிற வாதமும், மறுபுறத்தில், அவ்வகையான பிறழ்வு நடத்தைகளின் மீது ஆர்வத்தைத் தூண்டி, அவற்றை எப்படிப் 'பிடிபடாமல்' செய்வது என்கின்ற ஒரு சவாலையும் உருவாக்கிவிடும். மாறாக, வெகுஜனத் தொடர்புசாதனங்கள், நன்றாகச் செயற்படும் இளைஞர்களின் திறன்களைத் தட்டிக்கொடுப்பதோடு, அவர்கள் இத்தொடர்புசாதனங்களினூடாகத் தம் வயதொத்த மற்றையோருடனும் உறவாட வழிசமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இது மேலும் பல இளைஞர்களுக்கு ஆர்வத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும்.

**சா.சிவயோகன்**

விரும்பியோ விரும்பாமலோ நாம் தென்னிந்தியச் சினிமாக்களினதும், 'ஹொலிவுட்' சினிமாக்களினதும் தாக்கத்திற்கு ஆளாகியிருக்கின்றோம். இது கிட்டத்தட்ட ஒரு நாட்பட்ட தொற்றுநோய் போன்றது. இந்நோய்க்குச் சகல வயதினரும் ஆளாகக்கூடிய அபாயம் இருக்கிறது. இந்தச் சினிமாக்கள் மிகத் தாராளமாக வன்முறை சார்ந்த, விரசமான பாலுணர்வைத் தூண்டுகின்ற காட்சிகளைத் தம்மிடையே கொண்டுள்ளன. மேலும், இவை தாராளமாக வீடியோக்களிலும் கிடைக்கப்பெறுவதால், எல்லோருடைய வீடுகளுக்குள்ளும், குக்கிராமங்களுக்குள்ளும் ஊடுருவியிருக்கின்றன. இந்தப் படங்கள் அளிக்கை செய்யப்படும் முறை, மிக வன்மையானது; சக்தி வாய்ந்தது. ஆதலினால், அதிகளவில் மாற்றத்திற்குள்ளாகக் கூடிய சிறுவர்களும், இளைஞர்களும் இவற்றை நோக்கிக் கவரப்படுவதிலும், சினிமா நாயகர்களை உதாரண புருஷர்களாகக் கொள்ளப்புறப்படுவதிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை ஆனால் அவை ஆரோக்கியமற்ற நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்வது வருந்தத்தக்க பிரச்சினையாகிறது. இதுபோலத்தான் தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடர்களும்- அவற்றிலே வன்முறை குறைவாகக் காணப்பட்டாலும், ஒரே விதமான குடும்பப் பிணக்குகளும், அழுகை ஒப்பாரிகளும் மேலோங்கி, ஆரோக்கியமற்ற விடயங்களையே பெருமளவில் கொண்டிருக்கின்றன.

**....இந்தச் சினிமாக்கள் மிகத் தாராளமாக வன்முறை சார்ந்த, விரசமான பாலுணர்வைத்தூண்டுகின்ற காட்சிகளைத் தம்மிடையே கொண்டுள்ளன. மேலும், இவை தாராளமாக வீடியோக்களிலும் கிடைக்கப்பெறுவதால், எல்லோருடைய வீடுகளுக்குள்ளும், குக்கிராமங்களுக்குள்ளும் ஊடுருவியிருக்கின்றன. இந்தப் படங்கள் அளிக்கை செய்யப்படும் முறை, மிக வன்மையானது; சக்திவாய்ந்தது. ஆதலினால், அதிகளவில் மாற்றத்திற்குள்ளாகக்கூடிய சிறுவர்களும், இளைஞர்களும் இவற்றை நோக்கிக் கவரப்படுவதிலும், சினிமா நாயகர்களை உதாரண புருஷர்களாகக் கொள்ளப்புறப்படுவதிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் அவை ஆரோக்கியமற்ற நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்வது வருந்தத்தக்க பிரச்சினையாகிறது. இதுபோலத்தான் தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடர்களும் - அவற்றிலே வன்முறை குறைவாகக் காணப்பட்டாலும், ஒரே விதமான குடும்பப் பிணக்குகளும், அழுகை ஒப்பாரிகளும் மேலோங்கி, ஆரோக்கியமற்ற விடயங்களையே பெருமளவில் கொண்டிருக்கின்றன....**

இதற்கு என்ன செய்வது? சினிமாக்களும், தொலைக்காட்சித் தொடர்களும் மக்களோடு ஒன்றித்துப்போன, தாக்கமான ஊடகங்களாக அமைந்துவிட்டன. இவற்றைத் தடை செய்வதன் மூலம் 'தனிப்பட்ட உரிமைகளை மீறுதல்' என்கின்ற ஓர் எதிர்மறை உணர்வே மேலோங்க வழிவகுக்கும். மாற்றுச் சினிமாக்களின், தொலைக்காட்சித் தொடர்களின் அறிமுகமும், பிரபல்யப்படுத்தலும் ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்தும். குறைந்த பொருட்செலவிலான கதைப்படங்கள், விவரணச் சித்திரங்கள் தயாரிப்பதும், அவற்றைப் பிரபல்யப்படுத்தலும் அவசியமாகின்றது. அவ்வகையான தயாரிப்புக்களிலே உள்ளூர் இளைஞர்களையும் இணைத்துக் கொண்டால், அதற்கான ஆதரவுகள் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அதுபோலவே எங்களது ஏனைய கலைவடிவங்களது அளிக்கைகளும் அதிகரிக்கப்படவேண்டும். அவை தொடர்ச்சியாக அமைதலும் வேண்டும். இவற்றில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பது தெரிந்ததுதான். என்றாலும், எமது அடுத்த சந்ததியினருக்காக, எங்களை ஆளப்போகின்ற, பராமரிக்கப் போகின்றவர்களுக்காக, நாங்கள் கஷ்டப்பட்டென்றாலும் ஒரு மாற்றுக் கலாசாரத்தை உருவாக்கி அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவற்றிற்கு ஒட்டுமொத்தமான சமூக ஈர்ப்பையும் பரவலான ஆதரவையும் பெற்றுக்கொடுப்பதில் வெகுஜனத்தொடர்பு சாதனங்களும் பொறுப்புணர்வோடு நடந்துகொள்ள வேண்டும்.

இளைஞர்களது நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் இன்னுமோர் அம்சமாக பாலுணர்வு இருக்கிறது. மிக இயல்பான உணர்வுகளும், உந்துதல்களும் ஏற்படுகின்ற இந்தப் பருவத்திலே, பாலியல் பற்றிய சரியான அறிவு கிடைக்கப்பெறாமையால் பல வேண்டத்தகாத விளைவுகள் உருவாகியிருப்பதை நாம் காணுகின்றோம். பாலியல் பற்றி அறிய விரும்புகின்ற இயல்பான ஆர்வமானது (அப்படி ஏற்படாது விட்டால் அது அசாதாரணம்!) அவை பெற்றோரிடமிருந்தோ, ஆசிரியர்களிடமிருந்தோ முறையாகக் கிடைக்காதவிடத்து, 'முறைசாரா' நெறிபிறழ்ந்த ஆபாசப் படங்களையும், புத்தகங்களையும் நோக்கிச் செல்லத் தூண்டுவதனை நாங்கள் கவனமாக விளங்கிக்கொள்ள வேண்டும். தகுந்த வழிகளிலே இவை பற்றிய கல்வியூட்டல் அமையுமானால், ஆபாசப்படங்களினால் உருவாக்கக்கூடிய விரும்பத்தகாத விளைவுகளையும் பிழையான அறிவூட்டல்களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

இதுபோலவே சில இளவயதினர் போதைவஸ்துக்களைப் பரீட்சித்துப் பார்க்கும் நாட்டம் உடையவர்களாக இருப்பார்கள். நாங்கள் இது பற்றி மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். தற்பொழுது இருக்கின்ற இறுக்கமான போக்கு எங்களது சமூகத்தில் தொடர்ந்து நிலவவேண்டும். கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற இன்னோரன்ன போதைவஸ்துகள் அவற்றிற்கு அடிமையாகும் நிலையை விரைவில் தோற்றுவித்து, அவற்றுடன் தொடர்புடைய உடல், உள, சமூகப் பிரச்சினைகளையும், சீரழிவுகளையும் ஏற்படுத்திவிடும்.

வெகுசனத்தொடர்பு சாதனங்களைப்போல, சினிமாக்களின் தாக்கத்தைப் போல, எங்களது இளையவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இன்னுமொரு விடயம் வெளிநாட்டு மோகமும், பல்கலாசார ஊடாடல்களும் ஆகும். இவை இளைஞர்களது மனதில், வாழ்க்கை இலட்சியத்தில் பல குறுக்குவழிகளைத் தோற்றுவிப்பதோடு, அவர்கள் வெறுமனே கனவுகளில் தங்கியிருக்கவும், வெளிநாட்டு உதவியிலே தங்கியிருக்கவும் துணை போகின்றன. பொறுப்புணர்வு இல்லாமல், வெளிநாட்டில் இருந்துவரும் பணத்தைக் கொண்டு ஊதாரித்தனம் பண்ணும், விரலை மிஞ்சும் வீக்கங்கள் பற்றியும் நாங்கள் அக்கறை கொள்ளவேண்டும். அதுபோலவே வசதி படைத்த, ஆற்றல் உள்ள, இளைஞர்களை வெளி நாடுகளுக்குத் தொடர்ந்து இழந்து கொண்டிருப்பது பற்றியும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

**....பொறுப்புணர்வு இல்லாமல், வெளிநாட்டில் இருந்துவரும் பணத்தைக் கொண்டு ஊதாரித்தனம் பண்ணும், விரலை மிஞ்சும் வீக்கங்கள் பற்றியும் நாங்கள் அக்கறை கொள்ளவேண்டும். அதுபோலவே வசதி படைத்த, ஆற்றல் உள்ள இளைஞர்களை வெளிநாடுகளுக்குத் தொடர்ந்து இழந்து கொண்டிருப்பது பற்றியும் யோசித்துப் பார்க்க வேண்டும்....**

இதுவரையில் பார்த்த பொதுவான போக்குகளுக்கும் அப்பால், தனித்துவமான பல பிரச்சினைகளையுடைய, பிறழ்வுகளையுடைய சிறுவர்களும், இளைஞர்களும் இருக்கின்றார்கள். இவர்களது பிரச்சினைகளை அடையாளம் காணுதலும், தகுந்த இடங்களில் இருந்து ஆலோசனை பெறுவதும், தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுவதும் அவசியமானது. உளநலம் சார்ந்த பரப்புகளிலே ஈடுபாடுடையவர்கள் இதற்குத் துணைபுரிவார்கள். ஆயினும் பாடசாலைச் சூழலிலேயே இவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய ஆசிரிய உளவளத்துணையாளர்கள் உருவாக வேண்டும்.

நாங்கள் இதுவரையில் பார்த்த பல தீர்வுமுறைகள் சமூகத்தில் பரவலாக நடைமுறைப்படுத்தப்படுவதற்குத் தீர்மானங்களை எடுப்போரின் ஒத்துழைப்பும், அனுசரணையும் அவசியமாகின்றது. நடைமுறை யதார்த்தத்தில் தீர்மானங்களை எடுப்போர் அரசியல் துறைசார்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இளைஞர்களைப் பொறுத்தவரையிலே அரசியல் சித்தாந்தங்களை நோக்கிய கவர்ச்சி மிக இயல்பாக ஏற்பட்டு விடுகின்றன. பல சந்தர்ப்பங்களிலே அவர்கள் அரசியல் சார்ந்தவர்களுடன் சேர்ந்து பல்விதமான வேலைகளை மிகுந்த ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் செய்துமுடிப்பதனை நாங்கள் காணுகின்றோம். நாங்கள் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்க விளைகின்றோம். எமது அரசியல் சிந்தனைகளிலும் புதுமையும், தற்துணிபும், சுயாதிக்கமும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளுமே புதிய நடைமுறைகளைத் தோற்றுவிப்போராகவும், அதைக் கொண்டு நடத்துவோராகவும் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் இதனைக் கவனத்திற் கொண்டாலன்றி, புரிந்து

(10ஆம் பக்கம் பார்க்க)



# மீளக்குடியமரும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)
அடிப்படையில் இந்தத் தொகை மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த அழிவின் 25சத வீதத்தைத்தான் இத்தொகை நிவர்த்தி செய்யும்.

*கேள்வி:* வெளிநாட்டு உதவிகள் கிடைக்காவிட்டால் அரசு எந்த வகையில் இந்த நிதியை வழங்கப் போகிறது எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன அரசுக்கு உதவுகின்றன. இந்த வங்கிகள் இதைவிட வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமும் உதவுகின்றன. ஐரோப்பிய ஒன்றியமும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் உதவிகளை வழங்குகின்றன.

*கேள்வி:* அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் குடாநாட்டுக்கு போதியளவு கிடைக்கின்றனவா?

*பதில்:* அரசு இந்த வருடம் 7 கோடி ரூபா மாத்திரம் புனர்வாழ்வு அமைச்சு மூலம் வழங்கியுள்ளது. இதற்குப் புறம்பாக உலர் உணவு நிவாரணத்தை அந்த அமைச்சு வழங்கி வருகின்றது.

ஒப்பீட்டு அடிப்படையில் பார்க்கும் போது இவ்வாண்டு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் 16கோடி ரூபாவையும் ஐ.நா.சிறுவர் நிதியம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் என்பன 10 கோடி ரூபா நிதியையும் ஏனைய நிறுவனங்கள 2கோடி, 3கோடி ரூபா எனவும் செலவிட்டுள்ளன. இந்து கலாசார அமைச்சு 10கோடி ரூபாவை வழங்குகின்றது. புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சு ஆகியன மூலம் அரசு 17 கோடி ரூபாவை மட்டுமே வழங்கியுள்ளது. ஒப்பிட்டுப் பார்த்தால் அரசசார்பற்ற நிறுவனங்களே கூடுதலாக உதவுகின்றன.

அடுத்தவருடம் சிக்கலை எதிர்நோக்கியுள்ளோம். அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவிகள் 60 சதவீதத்தால் வெட்டப்படப்போகின்றன. அதேபோல ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் குடாநாட்டில் தமது பணிகளைக் குறைத்து தமது பணிகளை வன்னிப் பெருநிலப்பரப்புக்கு விஸ்தரிக்கவுள்ளது. யாழ். குடாநாட்டு அபிவிருத்தியில் அவை முக்கிய பங்கு வகித்து வந்தன.

இவ்விரு நிறுவனங்களின் உதவிகள் குறைக்கப்படும் நேரத்தில் அரச உதவி கிடைக்காவிட்டால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

இந்த நிதி நெருக்கடிகளால் மக்கள பெரிதும் பாதிக்கப்படலாம். வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் வாகனங்களில் ஓடுவதைப் பார்க்கும் மக்கள், உதவிகள் கிடைக்காததால் ஏமாற்றம் அடைவார்கள். இன்று இங்கு காணும் காட்சி மக்கள் மத்தியில் மாயை ஒன்றை உருவாக்கும் என்ற அச்சம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

காலநதான் இதற்கு பதில் சொல்ல வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப உதவிகள் கிடைக்காவிட்டால் அவர்கள் மத்தியில் விரகதி நிலை உருவாகலாம்.

*கேள்வி:* குடாநாட்டில் பணிபுரியும் அரச அதிகாரிகள் தமது பணிகளை மேற்கொள்ளாமல் சோம்பேறித்தனமாக செயற்படுவதாக குற்றஞ் சுமதத்தப்படுகிறதே அது உண்மையா?

*பதில்:* அவர்கள் சோம்பேறிகள் என்பதை ஏற்கமுடியாது. கடந்த 20 வருட காலமாக நிலவிய சூழல் அவர்களை சுயமான செயற்பாட்டில் இருந்து தடுத்துள்ளது. தமது அலுவலை மட்டும் பார்த்துவிட்டு ஒதுங்கும் நிலைப்பாட்டுக்கு மாறியுள்ளனர்.

அரசியல் ரீதியாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு அரசியல் சூழ்நிலை மாறியவுடன் அவர்கள் மாறவில்லை. அவர்கள் நிலைமையை அவதானித்து வருகின்றார்கள். சுயமாக சிந்தித்து செயற்படக்கூடிய சூழல் ஏற்படுமென நம்புகின்றேன். ✦


## யா/மண்கும்பான் அ.த.க.பாடசாலை
## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்ட
## அறிவித்தல்

மேற்படி பாடசாலை வளர்ச்சிக்காக நாளை (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை விசேட பொதுக்கூட்டம் நடைபெறும். எனவே, பழைய மாணவர்கள், பெற்றோர், இளைஞர், யுவதிகள், நலன் விரும்பிகள் தவறாது சமுகமளிக்கவும்.

காலை 9.00 மணிக்கு (புதியநேரம்) பாடசாலை மண்டபத்தில் நிகழும் இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படும்.

தலைவர்,
பழைய மாணவர் சங்கம், - செயலாளர்.
மண்கும்பான். (சி-30612) (25-24-12-16)



## சிறந்த இரு வாகனங்கள்
## விற்பனைக்குண்டு

BRAND NEW சிவப்புநிற நிஷான் வர்க்க இரு கெப் வாகனமும் (டீசல்), 504 பேர்ஜோ வர்க்க சிவப்பு நிற டீசல் காரும் விற்பனைக்குண்டு.

இரு வாகனங்களும் சிறந்த முறையில் செலுத்தியதோடு, வந்து பார்வையிட்டு பரிசோதித்து பார்க்கவும் முடியும்.

தொடர்பு:- V.நாகரத்தினம்,
(சக்தி உணவகம் அருகில்)
*கே.கே.எஸ். வீதி,*
*சுன்னாகம்.*
(24-12-16) (23481)


# தமிழ் - முஸ்லிம் நல்லுறவை வளர்க்க துரித நடவழக்கை

## வவுணதீவில் நடந்த உபகுழுக் கூட்டத்தில் தீர்மானம்

மட்டக்களப்பு,ஒக்.11

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கட்டியெழுப்புவதற்கு இரு சமூகத்தினரும் அங்கம் வகிக்கும் உபகுழுக்கள் மூலம் துரித நடவடிக்கை எடுக்கப்படும். பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமையிலான முஸ்லிம்கள் குழுவுக்கும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஷ் தலைமையிலான விடுதலைப் புலிகள் குழுவுக்குமிடையே மூன்று மாதங்களின் பின்னர் நேற்று நடைபெற்ற 5ஆவது கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் லைலா பதாவி தலைமையில் வவுணதீவு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இக்கூட்டம் மூன்றரை மணி நேரம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பாக மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரி.ரமேஷ், அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், நிதிப் பொறுப்பாளர் குகனேசன் ஆகியோரும் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் சமூகத்தின் சார்பில் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் வீடமைப்பு பிரதியமைச்சருமான பசீர் சேகுதாவூத் தலைமையில் ஏறாவூர் நகர, பிரதேசசபைத் தவிசாளர் ஏ. அப்துல் நாஸர், ஏறாவூர் வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.எச்.அபூஹனீபா, காத்தான்குடி சமாதான செயலகப் பொறுப்பாளர் யூ.எல்.எம்.முபீன், எம்.ரி.எம்.பரீத், பி.ஏ.ஜலால்தீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக நேற்று ஐந்தாவது தடவையாக இரு தரப்பினரும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற பேச்சுக்களில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புலிகள் இயக்கத்திற்கும், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்புக்களின் மூலம், மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு தரப்பு உறவுகளில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் பாரிய அளவில் விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சுதந்திரமாகச் சென்று நடமாடுவதற்கும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குமான சூழ்நிலைகள் தம்மால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ரமேஷ் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வுகளை மேலும் வலுப்படுத்துவற்கான வழிவகைகள் பற்றி இன்றைய கூட்டத்தில் பேசப்பட்டதாகவும் அவர் கூறினார்.

முஸ்லிம் சமூகத்தின் சார்பில் கலந்துகொண்ட பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் கருத்து வெளியிடுகையில், ஏற்கனவே, நடைபெற்று முடிந்துள்ள பேச்சுக்களின் பின்னர் புதிதாக ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு சுமுகமான முடிவுகள் எடுக்கப்பட்டன எனக் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தின் சாகாமம் பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

உபகுழுவின் அடுத்த கூட்டம் அடுத்த மாதம் எட்டாம் திகதி நடைபெறும். (எ)

## குடும்பதினவிழா

குருநகர்,ஒக்.11

யாழ். அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு குடும்பதின விழா கொண்டாடப்படவுள்ளது.

அகவொளி இயக்குநர் வண.பிதா எஸ்.ஜே.இராசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, குடும்பதின ஆயத்துப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். (எ-51)

## இந்திய...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டாலன்றி மாற்றங்கள் எதுவும் ஏற்படப்போவதில்லை.

இளைஞர், யுவதிகள் குழுக்களாக வேலை செய்வதற்கும், அவர்களது சுதந்திரமான சிந்தனை வளர்ச்சிக்கும் வழிசமைக்கப்படல் வேண்டும். அவர்கள் தங்களுக்குள்ளே தேடியலைகின்ற சுய அடையாளத்திற்கான 'தீனிகள்' வழங்கப்பட வேண்டும். உண்மையிலேயே எங்கள் சமூகம் இன்றைய இளந்தலைமுறையினரில், அவர்களது சிந்தனையோட்டத்தில் தங்கியிருக்கின்றது. எங்களது இவ்வளவுகாலப் பாடுகளுக்குத் தகுந்த பலன் கிடைப்பதென்றால், அதனைத் தக்கவைத்து மேலும் முன்னேறுவதென்றால், அது எங்கள் இளைஞர்களது ஆரோக்கியமான சிந்தனைகளாலும், நடத்தைகளாலுமே கிடைக்கப்பெறும். நாங்கள் காலத்துக்குகந்த புதியதொரு மாற்றுக் கலாசாரத்தையும் இளையோர் துணைகொண்டு உருவாக்கியாக வேண்டும்.

பாரதியாரின் "அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்" பாடல் ஞாபகத்திற்கு வருகிறது. (முற்றும்)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 06 - 07 - 1927 இறப்பு 11 - 09 - 2003

### திருமதி பரஞ்சோதி சபாரட்ணம்

'பாசம்' என்ற சொல்லுக்கும்
'பரிவு' என்ற சொல்லுக்கும்
அர்த்தம் தேடி அகராதிகளைப்
புரட்டினோம் என்ன ஆச்சரியம்!
தாயே...! அதில் எல்லாம் உன் பெயர்...!!!
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

*186/2, சேர் பொன் இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (23376) (25-24-12-16) - குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி
### கார்த்திகேசு தவமணி

உதிர்வு: 12.09.2003

அன்புக்கோர் அகல் விளக்காய்
பண்புக்கோர் பாசதீபமாய்
இந்தப் பாரினிலே ஒளி வீசினீர்களே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

12.09.2003 அன்று பிரான்ஸல் இறைபதம் அடைந்த எமது அன்புச் சகோதரி திருமதி கார்த்திகேசு தவமணி அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வும் மதியபோசனமும் நாளை (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை கெருடாவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*கெருடாவில்,*
*சாவகச்சேரி.* (23444) (25-24-12-16)
செ.பத்மநாதன் (சகோதரன்).



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### மகாராசா பகீரதன்

மலர்வு: 15.06.1992 உதிர்வு: 11.09.2003

அன்புடன் வளர்த்த எம்மைத் தவிக்கவிட்டு
பாசம் கொண்ட சகோதரர்களைத் தவிக்கவிட்டு
நண்பர்கள், உறவுகளை கதிகலங்க வைத்து
உறங்கி விட்டதேனோ?

இன்று (11.10.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயறும்:
அப்பா - மகாராசா,
அம்மா - இந்திராதேவி,
அக்கா - ஜெகதீஸ்வரி,
அண்ணா - கேதீஸ்வரன்.

*குமரநகர்,*
*கைதடி மத்தி.* (2348-[illegible]2-16-24)

# நீதிமன்றங்களூடாக நீதியைப் பெற சரியான வழிகாட்டுதல்கள் அவசியம்

*இன்றைய காலகட்டத்தில் பல்கிப்பெருகிவரும் குற்றச் செயல்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள், சகலரது நலன்களையும் பாதுகாக்க எவ்வகையில் மேலும் உதவலாம் என்பது ஒரு முன்னுரிமை பெற்ற விடயமாகிவிட்டது.*

*இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றமானது நாளை ஞாயிறு காலை 10மணிமுதல் 12.30வரை மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான விசேட சட்டப் பட்டறை ஒன்றினைக் கிராம சேவையாளர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், நன்னடத்தை அதிகாரிகள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரிகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறை மண்டபத்தில் நடத்தவுள்ளது. அதனை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.*

இலங்கையில் நடைபெற்றுவந்த 20 ஆண்டு காலப் போரின் தாக்கங்களின் விளைவுகளும், முதலாளித்துவத்தின் 'பூகோளமயமாக்கல்' (Globalisation) என்ற திசை திருப்பலான புதிய உலக ஒழுங்குமுறை (New World Order) என்பதன் தாக்கங்களும், ஒருபுறத்தில், ஒரு சாராரை மேலும் மேலும் செல்வந்தர்கள் ஆக்குகையில், மிகப்பெரும் பகுதியினரை பெரும் வறுமையினுள்ளும், அறிவு - ஆராயும் தன்மை வளர்ச்சி நிராகரிப்பினுள்ளும் வீழ்த்திவருகின்றன. இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கைமுறை, சித்தாந்தம், அரசியல், ஏனையவைகளில், பெரும் தாக்கங்களையும் ஏற்படுத்திவருகின்றன.

தமிழ்மொழியில் ஆத்திசூடி, நல்வழி, கொன்றைவேந்தன், நாலடியார், திருக்குறள் மற்றும் அறநெறி நூல்களும; சிலப்பதிகாரம் மற்றும் காப்பியங்களும்; சித்தாந்த நூல்களும், 2000 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே எழுதப்பட்டு வந்துள்ளன எனப் பாடநூல்களிலும், மேடைகளிலும், வெகுஜனத்தொடர்பு சாதனங்களிலும் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றபோதிலும், எமது சமூகத்தில் இன்று உரிமைகள மீறல், அதிகார துஷ்பிரயோகங்கள், வன்செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புகள், கொலைகள், ஏமாற்றுக்கள், மோசடிகள்..... என்பவை பல்கிப்பெருகியே உள்ளன என்பதை, எடுத்த எடுப்பில் எவரும் நிராகரித்து விடமுடியாது.

ஒரு சமூகத்தில் உரிமைகள் மறுப்பு, அதிகார துஷ்பிரயோகம், உரிமைகள் மீறல், வன்செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புகள், கொலைகள், ஏனையவைகள், உண்மையில் அறிவும், ஆராயும் தன்மையும் அச்சமூகத்தில் பரந்த அடிப்படையில் போதிய அளவிற்கு வளர்க்கப்படாதமையால்தான் உருவாகின்றன.

மேலும், குறிப்பிட்டவொரு விடயம் தொடர்பாக நீதியைப் பெற்றுக்கொள்வதாயின், பாதிக்கப்பட்டவர் நீதியைக் கோரவேண்டும். பாதிக்கப்பட்டவர் உறங்குநிலையில் இருந்தால், அவருக்கு நீதி கிடைக்கமாட்டாது. பாதிக்கப்பட்ட ஒருவர், தான் உறங்குநிலையில் இருந்துவிட்டு, தனக்கு நீதி கிடைக்கவில்லை எனக்கூறுவது, ஒருபுறத்தில், அவரது அறியாமையையும், சுயநலப்போக்கையும், புத்திசுவாதீனமற்ற நிலையையும்தான் உறுதிப்படுத்தும். மறுபுறத்தில், அவரது செய்கையானது, சமூகத்தில் அநீதி நிலைத்துக் கொள்ள உதவும் ஒரு சமூக விரோதச்செயற்பாடுமாகும்.

இந்தநிலையில், மேற்குறிப்பிட்டவைகளைச் சமூகத்தில் குறைப்பதாயினும் சரி, இல்லாது செய்வதாயினும் சரி, இரண்டு முக்கிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் செய்யப்படவேண்டியுள்ளன. அவையாவன:-

1. எமது சமூகத்தின் அறிவையும், ஆராயும் தன்மையையும் போதிய அளவிற்கு வளர்த்துக்கொள்ளவும், அதனூடாக மனித வாழ்க்கையினை விஞ்ஞான ரீதியாக விளங்கிக்கொள்ளவும் வழிவகைகளைத் திட்டமிட்ட விதத்தில் நடைமுறைப்படுத்துவது;

2. சமூகத்தில் நடைபெறும் உரிமைகள் மீறல், அதிகாரத் துஷ்பிரயோகம், வன்செயல்கள், கொலைகள், பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்பு, ஏனையவைகளுக்கு எதிராக மக்கள் நீதியைப்பெற்று, குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பதற்கான விழிப்புணர்வுகளைச் சமூகத்தில் ஏற்படுத்துவதும், நீதிமன்றங்களூடாக நீதியைப் பெற உதவுவதும்.

இவற்றுள் முதலாவதை, சமூகத்தால் அரசியல் தலைவர்களாகவும், சமூக, சமயத் தலைவர்களாகவும், அறிஞர்கள், கல்விமான்களாகவும் கருதப்படுபவர்களும், ஏற்கப்படுபவர்களும், கல்வித்திட்ட வகுப்பாளர்களும், ஊடகங்களுமே செய்யவேண்டும். பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையான கல்விப் பாடத்திட்டங்கள், தகுந்த விதத்தில் மாற்றியமைக்கப்படவேண்டும். அவை மனித வாழ்க்கையினை விஞ்ஞான ரீதியாக விளங்கிக் கொள்ளவும், அதனடிப்படையில் மனித வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது? பூமியில் மனித இனம் நிலைக்கவும், மேன்மையான, பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உதவும் என்பதை விளங்கி, சட்ட உருவாக்கங்கள் பற்றியும், நீதி பெறுகை, நீதி வழங்கல் என்பவைகள் பற்றிச் சரியாக அறிந்து செயற்படவும் உதவும்.

மேலும், ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் சட்டங்கள், சாதாரண மக்களின் நலன்களைப் பாதுகாக்கும், அவர்களது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் நோக்கங்களைக் கொண்டவையா அல்லது ஒரு சாராரினதும், அதிகாரத்தில் இருப்பவர்களினதும் நலன்களையும், பாதுகாப்பையும் பேணும் நோக்கத்தைத்தான் கொண்டவையா என்பதை அறிந்துகொள்ளவும் இது பெரிதும் உதவும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இலங்கை போன்ற நாடுகளில் கல்விப் பாடத்திட்டங்கள் கடந்த காலங்களில மாணவர்களது,ஆகவே சமூகத்தினது அறிவையும், ஆராயும் தன்மையையும் போதிய அளவுக்கு வளர்த்துக்கொள்ள உதவும் வகையில் வகுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கசப்பான பெரும் உண்மையாகும். இந்த நிலையில், இரண்டாவது விடயமும் மிக முக்கிய இடத்தை இன்று பெறுகிறது.

கல்விப் பாடத்திட்டங்களில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்களைச செய்ய, சட்டத்தரணிகளும், அவர்களது அமைப்புக்களும் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரமுடையவர்களுக்கு அழுத்தத்தையும், வலியுறுத்தலையும் மாத்திரமே செய்யமுடியும்.

இரண்டாவதைப் பொறுத்தமட்டில், மக்கள் நீதியைப்பெறவும், குற்றவாளிகளைத் தண்டிக்கப்படவைப்பதற்கான விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்துவது வேறு; நீதி மன்றங்களூடாக மக்கள் நீதியைப்பெற உதவுவது வேறு. இந்த அடிப்படை வேறுபாடுகளின் முக்கியத்துவங்களை விளங்கிக்கொள்வது மிகமுக்கியமானது.

**சாந்தா அபிமன்னசிங்கம்**
**ஒருங்கிணைப்பாளர் - யாழ்ப்பாண மாவட்டம், சட்ட உதவி மன்றம்.**

எத்தனை மில்லியன் ரூபாய்கள் செலவில் நீதியைப்பெறுவது தொடர்பாகவும், குற்றவாளிகளைத் தண்டிக்கப்படவைப்பது தொடர்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவென நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பல நூறு விழிப்புணர்வுப் பட்டறைகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்தப்பட்டால் என்ன, வெகுஜனத்தொடர்பு சாதனங்களில் கட்டுரைகள் எழுதப்பட்டால் என்ன, வாசிக்கப்பட்டால் என்ன, சாதாரண, வறியமக்கள் நீதிமன்றங்களூடாக நீதியைப்பெற அவர்களுக்கு வழிவகைகள் செய்யப்படாவிடின், அது உண்மையில், நீதி மறுப்புக்குச் சமனானதாகும். இங்குதான், சட்டத்தரணிகள் மிக முக்கியமாகின்றனர், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் UNHCR மற்றும் உள்ளூர், சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் நடத்தப்பட்டுவரும் சட்ட உதவி மன்றமும் (Legal Aid Foundation) மிக முக்கியமாகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை நீதிமன்றங்களூடாகப் பெறுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களை மாத்திரம் நடத்துவது, உண்மையில், மக்கள் பயன்பெற முடியாத, ஒரு போலி நடவடிக்கையென்றே கூறவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை நீதிமன்றங்களூடாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வழியமைத்துக்கொடுக்கப்படாவிடின், அவர்கள் நீதிமன்றங்களூடாக நீதியைப் பெற முடியாத நிலைதான் தொடரும்.

இங்குதான், வழிகாட்டல்கள், சட்ட உதவிகள் என்பன முக்கியமாகின்றன. தூர, கொழும்பு, வேறு இடங்களில் இருந்து வந்தும், உள்ளூர்களில் இருந்தும், நீதி பெறுவது தொடர்பான விழிப்புணர்வுப் பட்டறைகளையும், கருத்தரங்குகளையும், கூட்டங்களையும் நடத்திய பின்னர், பெருவேலைகள் முடிவடைந்துவிட்டன எனக் கருதுவது, உண்மையில் நீதிமறுப்புக்குத் துணை போகும் ஒரு செயற்பாடே.

மக்கள் நீதியைப்பெற, மக்களுடன் கிராமங்கள் தோறும் செயலாற்றும் கிராமசேவையாளர்கள் மற்றும் சமூக சேவையாளர்களூடாக, மக்களுக்காக மாவட்டங்கள், பிரிவுகள் தோறும் செயற்படும் சட்ட உதவி மன்றங்களுடன் சாதாரண மக்கள் இணைக்கப்படாவிடின், வறிய, நொந்த நிலையில் இருக்கும் மக்கள் நீதிமன்றங்களூடாக நீதியைப் பெறமுடியாத நிலைதான் உண்மையில் தொடரும்.

இப்படியான பெரும் குறைபாடுகளை நீக்கி, சமூகத்தில் உரிமைகள் மீறல், பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்புகள், கொலைகள், ஏனையவைகளுக்கு எதிராக வறியவர்களும், இடம்பெயர்ந்த மக்களும் நீதியைப் பெற 2002ஆம் ஆண்டிலிருந்து இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் UNHCR மற்றும் அமைப்புக்களின் உதவியுடன் செயற்படும் சட்ட உதவி மன்றமானது, யாழ். மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்திற்கான தலைமை அலுவலகம், யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு அருகில், 4ஆம் குறுக்குத் தெரு, இலக்கம் 159 இல் அமைந்துள்ள மாடிக்கட்டடத்தில் அமைந்துள்ளது. தொலைபேசி மூலத் தொடர்பு இலக்கம்: 021 - 221 - 5555 ஆகும். வடமராட்சிப்பகுதிக்கான பிரிவு அலுவலகம்: பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில், வதிரியில் அமைந்துள்ளது.

சட்ட உதவி மன்றமானது, பின்வரும் சட்ட உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது:

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கும், மீளக் குடியமர்ந்தோருக்கும்.
2. மனித உரிமைகள், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக.
3. குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர் தொடர்பாக.
4. நுகர்வோர் - பாதுகாப்புத் தொடர்பாக.
5. வெளிநாடுகளில் தொழில புரியும் பணிப்பெண்களுக்கான சட்ட உதவி தொர்டர்பாக.
6. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கான சட்ட உதவி.
7. முதியோருக்கான சட்ட உதவி.

இவற்றுள் 1, 6 ஆம் விடயங்கள் தொடர்பில், தாபரிப்பு வழக்குகள், விவாகரத்து வழக்குகள், திருமணம் செய்வதாக எழுத்துமூலம் வாக்குக் கொடுத்துவிட்டு மீறுவது தொடர்பான வழக்குகள், விபத்துக்களால் மரணமடைந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் வழக்குகள் போன்றவை இலவசமாகச் செய்துகொடுக்கப்படும்.

இவற்றுள் 3ஆவது விடயம் தொடர்பில், கற்பழிக்கப்பட்ட பெண்கள், சிறுமிகள், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள், பெண்கள், வீடுகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் மனைவிமார் போன்றோரின் விடயங்கள் அடங்கும்.

வறியவர்களுக்கான இலவச DNA Signature:

இன்று எமது சமூகத்தில் வயது குறைந்த பெண் பிள்ளைகள், கர்ப்பிணிகளும், தாய்மாரும் ஆக்கப்பட்டுள்ளனர். இது சட்டத்திற்கு விரோதமான செயற்பாடாகும். தாய் தந்தையரும், பெண்பிள்ளை விரும்பினாலென்ன, விரும்பாவிட்டால் என்ன, 18 வயதிற்குக் குறைந்த ஒரு பெண் பிள்ளை கர்ப்பிணி ஆக்கப்பட்டால், தாய் ஆக்கப்பட்டால், இன்றைய இலங்கைச் சட்டத்தின்படி, அது கற்பழிப்புக்குச் சமனானதாகும்.

மேலும், யாழ்ப்பாண, ஏனைய மாவட்டங்களில் ஒருபுறத்தில் பெண்கள் தாயாக ஆக்கப்பட்டபின்னர், அப்பிள்ளையின் தந்தை, அப்பிள்ளை தன்னுடையது அல்ல எனக் கூறுவதும், பலருடன் சென்று தாயான ஒரு பெண், தனது பிள்ளையானது தான் சுகவாழ்வில் இருக்க வழிவகைப்படுத்தக்கூடிய ஒருவரினது எனப் பொய்யாகக் கூறுவதும், பிரிந்து வாழ்வதாகக்கூறும் கணவன், பிள்ளைகள் தன்னுடையது அல்ல எனக்கூறி, பராமரிப்புப்பணத்தைக் கட்ட மறுப்பதும், விவாகரத்தைக் கோருவதும், நீதிமன்றங்களால் நீதியை வழங்குவதில் பெரும் பிரச்சினைகளை உருவாக்கி வந்திருந்தன.

இந்த நிலையில், யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தின் பெருமுயற்சியின் பலனாக, பிறந்த பிள்ளையானது குறிப்பிட்ட ஒருவரின் பிள்ளைதானா, இல்லையா என்பதை மரபணு ஆய்வு மூலம் அறிந்து, நீதியை வழங்க DNA Signature பெற்றுக்கொள்ளும் முறையானது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் புகுத்தப்பட்டது. இப்படியான சம்பவங்கள் மிகப்பெருமளவில வறுமையான மக்கள் மத்தியில் நடைபெற்றுவருவதால், DNA Signature இனை வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள சகல பெண்களுக்கும் இலவசமாகச் செய்யும் திட்டத்தினை சட்ட உதவி மன்றமானது புகுத்தியுள்ளது. இதனால், பல பெண்களும், ஆண்களும் நீதியைப்பெற வழிவகுக்கப்பட்டுள்ளது. ◆

# இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படின் அபிவிருத்திப் பணிகள் முழு வெற்றிபெறும்

## மட்டு. அபிவிருத்திக் கூட்டத்தில் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.

ஆரையம்பதி,ஒக்.11

இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்டால் அபிவிருத்திப்பணிகள் முழு வெற்றியடையும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்த அதிகாரிகள் முழு உற்சாகத்துடன் பணி செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்ட "அபிவிருத்திக் கூட்டம், ஒருங்கிணைப்புக் கூட்டம் என்பன கடந்த ஆறாம் திகதி மாவட்டச் செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சுமார் இரண்டுமாத இடைவெளிக்குப் பின்பு நடைபெறும் இக்கூட்டத்தில் கடந்தகால, எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி தொடர்பான முன்னேற்பாடுகள் என்பன பற்றி ஆராயப்பட்டது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை, மாவட்டத் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத்தின் பிரதிநிதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாவின் பிரதிநிதி, அமைச்சர் காதர் முகைதீனின் பிரதிநிதி மற்றும் 120 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை உரையாற்றிய போது கூறியதாவது:-

"மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திக்கென ஒதுக்கிய தொகையில் 44 வீதத்தை திருப்பி அனுப்பிய வரலாறுகள் உண்டு.

"இனி ஒதுக்கப்படும் தொகையில் ஒரு ரூபா கூட திரும்பிச் செல்லக் கூடாது. இதற்கு மாவட்டத்தில் கடமை புரியும் சகல அதிகாரிகள் இரவு. பகல் பாராது சேவையாற்றவேண்டும்.

சம்பளத்தை மட்டும் பெற்றுக் கொண்டு ஏனோதானோ என்று கடமை புரியாமல் எமது மாவட்டத்தில் அழிந்த சகல கட்டுமானங்களையும் கட்டியெழுப்ப செயலாற்ற வேண்டும்"

- என்று தெரிவித்தார்.

(ம)

பாதுகாப்பு வலயத்தில் உள்ள

# வீடுகளைப் பார்வையிட மாதகல் மீனவருக்கு அனுமதி

பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள மாதகல் பிரதேச மீனவர்களின் வீடுகளைப் பார்வையிடவும், வீடுகளில் உள்ள அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரவும் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அண்மையில் கடற்படை அதிகாரி று வான் பெரேராவுக்கும் அப்பகுதி மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளில் சிலவும் கடற்படை அதிகாரியால் தளர்த்தப்பட்டுள்ளன - என்றும் தெரிவித்தனர். (எ-10-95)

# பனம் தொழில் வல்லுநர்களுக்கு சமூக மேம்பாட்டுத் திட்டம்


வலி.தென்மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் அண்மையில் சமூக மேம்பாட்டுத்திட்டம் என்னும் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

அத்திட்டமானது மரணமடைகின்ற பனம் தொழில் வல்லுநர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதை நோக்கமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தலா ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணம் கணவனை இழந்த மற்றும் மகனை இழந்த குடும்பங்களுக்கு பேருதவியாக அமையுமென்று சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், மாதாந்த ஓய்வூதியமாக 500ரூபாவும் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 60வயதைக் கடந்த பனம் தொழில் வல்லுநர்களும் பயன்பெற்று வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-10-95)

# 'மறுமலர்ச்சி' சஞ்சிகையைத் தந்த ஐவரில் ஒருவர் பஞ்சாட்சர சர்மா



'நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்' என்று உண்மையாகவே கருதுகின்ற சிலரில் நானும் ஒருவன்.

ஆயினும் -

எமக்கு மிகவும் வேண்டிய ஒருவர் மீது அந்த எமன் பாசக்கயிறை வீசும் போது கலங்கித்தான் போகின்றோம்.

24.09.2003 'உதயன்' இதழில் கோப்பாய் பண்டிதர், ச.பஞ்சாட்சர சர்மா அவர்களின் மறைவுச் செய்தியைப் படித்தபோது ஒருகணம் ஆடித்தான் போய்விட்டேன்.

சுமார் அரைநூற்றாண்டு காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கிறேன். 1946 ஆம் ஆண்டு.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் விடப்படமுடியாத 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகை அப்போது வெளிவருகிறது. அதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பெற்ற தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் ஐந்து பேர் சேர்ந்து மறுமலர்ச்சி சஞ்சிகையைத் தொடங்கினோம். நான் (வரதர்), நாவற்குழியூர் நடராசன், பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மா, க.இ.சரவணமுத்து (கவிஞர் சாரதா), க.கா.மதியாபரணம் ஆகியவர்கள்தான் அந்த ஐந்து பேர். சில ஆண்டுகளுக்கு முன்பு கலாநிதி நாவற்குழியூர் நடராசன் கனடாவுக்குப்போய் அங்கிருந்தும் 'மேலே' போய்விட்டார். பிறகு கவிஞர் க.இ.சரவணமுத்துவும் அவரைத் தொடர்ந்து இலக்கிய நண்பர் க.கா. மதியாபரணமும் அமரரானார்கள். சென்றவாரம் வரை, நானும் பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மாவும் வாழ்ந்திருந்தோம். இருந்தும், அவர் பதுளையில் நான் யாழ்ப்பாணத்தில். இப்போது அவரும் போய்விட்டார். நான் மட்டும் தனித்து நிற்கின்றேன்.

## நீத்தார் நயப்புரை

கடைசியாக 1992 இல் அவரை கொழும்பில் ஒரு முறை சந்தித்தேன. அவருடைய நண்பரின் நூல் வெளியீட்டு விழாவுக்காக பதுளையிலிருநது அவர் கொழும்புக்கு வந்திருந்தார். நான் கொழும்பில் அப்போது அகதியாக இருந்தேன். அதற்குப் பிறகு சர்மாவை பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

மறுமலர்ச்சிக்கால சர்மா இப்போது என் மனதினுள்வந்து புன்முறுவல் பூக்கிறார். என்னிலும் பார்க்க சர்மா சுமார் 8 ஆண்டுகள் மூத்தவர். (மறையும்போது அவருக்கு வயது 87 இருக்குமென நினைக்கிறேன்.)

எங்கள் 'மறுமலர்ச்சி' குழுவில் அப்போது அதிகம் படித்தவர் சர்மா என்றே சொல்லலாம். வடமொழியில் பண்டிதர் பட்டம் பெற்றவர். மலையாளத்தை மொழிபெயர்க்கக் கூடிய அளவுக்கு அறிந்திருந்தவர்.

அவரிடமிருந்து அறிவுச் செல்வத்தின் சிறு பகுதிகூட வெளியே வரவில்லை என்றே நான் நினைக்கின்றேன். அவர் அறிவுக்கடல். ஆனால், குடத்துள் விளக்கு.

பழகுவதற்கு இனியவர் சர்மா. நல்ல பண்பாளர். அந்த அறிவார்ந்த நண்பரை இன்று நினைக்கும்போது- நெஞ்சு நெகிழ்கிறது.

- வரதர்
*(சாகித்திய இரத்தினம் தி.ச.வரதராசன்)*

# மக்கள் முகம்



அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த வே.விமலசிங்கம் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், காலி மேக்கண்டைல் வங்கி, யாழ். வர்த்தக வங்கி ஆகியவற்றில் லிகிதராக 26 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், சித்தன்கேணி, போரூட் தொழில்நுட்ப பாடசாலையிலும் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து போதனாசிரியராக 4 வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

இவர், சமூக சேவையாளரும்கூட. (எ)

* * *



யாழ். வண்ணார்பண்ணை கிழக்கு, கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலம் பாலசுப்பிரமணியம் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு, கல்கிசை மாவட்ட நீதிபதி பி.ஆர்.வல்கம முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் இணைச் செயலாளராகவும், திருமலை நீர்ப்பாசன திணைக்கள நலன்புரிச் சங்கத்தின் பொருளாளராகவும், ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்கள பொழுதுபோக்கு / நலன்புரிச் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க உப செயலாளராகவும் பொதுச் சேவைகள் ஆற்றியுள்ளார். இவர், யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். (எ)

* * *



யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைச் சேர்ந்த சாம்பசிவம் கிரிதரன் யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், யாழ். வண்ணை, கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தான செயலாளரும், சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். (எ)

* * *



சண்டிலிப்பாய், 7ஆம் கட்டையடியைச் சேர்ந்த கந்தசாமி சுதர்சன் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வடலியடைப்பு ஜே/145 கிராம அலுவலரான இவர், பல்வேறு பொதுநல நிறுவனங்களிலும் நிர்வாக உறுப்பினராக இருந்து பல்வேறு சமூகசேவைப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். (எ-135)

* * *



வடலியடைப்பு, கலைவாணி வீதியைச் சேர்ந்த நடராசா நாகராசா யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், மாதகல் தெற்கு ஜே/151 கிராம அலுவலராகவும், முள்ளானை ஜே/156 பதில் கிராம அலுவலராகவும் கடமையாற்றி வருகின்றார்.

கதாசிரியரும், நடிகருமான இவர், நீண்டகாலமாக நாடகங்கள் பலவற்றில் கதாசிரியராக இருந்ததுடன் நகைச்சுவை நடிகராகவும் நடித்துள்ளார். (எ-135)

* * *



பருத்தித்துறை, வட இந்துமகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சௌமியா புருஷோத்தமக்குரு, பேராதனை தமிழ்ச் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கீழ்ப்பிரிவு மட்டத்திலான கட்டுரைப் போட்டியில் சிறப்பு பரிசில் பெற்றுள்ளார். (எ-173)

* * *



காரைநகர், மல்லிகையைச் சேர்ந்த திருநாவுக்கரசு நித்தியானந்தன் யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சில்லாலை தெற்கு ஜே/149 கிராம அலுவலராக இவர் பணிபுரிந்து வருகின்றார்.

பல்வேறு பொதுநல அமைப்புகளில் நிர்வாக உறுப்பினராகவும் இவர் பணியாற்றி வருகின்றார். (எ-135)

* * *



கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா சண்முகசுந்தரம் அண்மையில் யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், முன்னாள் கொழும்புத்துறை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவரும், கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார், ஐயனார், அம்மன் கோவில் ஆகியவற்றின் தர்மகர்த்தாவும், கொழும்புத்துறை சனசமூக நிலைய பொருளாளரும், யாழ். ப.நோ.கூ. சங்க பொதுச்சபை உறுப்பினரும் சமூக சேவையாளருமாவார். (எ-135)

## பிரிவுபசார விழா

காரைநகர்,ஒக்.11

வடபிராந்திய போக்குவரத்துச சபை காரைநகர்சாலை முகாமையாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற க.உருத்திரசுந்தரத்துக்கான பிரிவுபசார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காரைநகர்சாலை முகாமையாளர் எஸ்.இராமச்சந்திரன் தலைமையில் காரைநகர்சாலையில் இவ்விழா நடைபெறும். (எ-73)

## மூளாய் ஆஸ்பத்திரியில் உருவப்படங்கள் திறப்பு

வட்டுக்கோட்டை,ஒக்.11

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் உயர்ச்சிக்காக உழைத்த நால்வரது உருவப்படங்கள் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி வைத்தியசாலையில் 1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தலைவராக பதவிவகித்த முன்னாள் வலி. மேற்கு பிரதேச செயலர் கா.சந்திரராசா, ச.க.வேலாயுதர், மா.இரத்தினசிங்கம் மற்றும் நீண்டகாலம் வைத்திய சேவையாற்றிய டாக்டர் தி.சம்பந்தர் ஆகியோரது உருவப்படங்களே வைத்தியசாலையின் கட்டடத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின் நினைவுப் பேருரைகளை பணிப்பாளர்சபை செயலாளர் க.செல்வராசா, வைத்தியகலாநிதி எஸ்.மகேசன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி, ஜீ.ரி.இசற் பிரதம இணைப்பாளர் எஸ்.இராஜசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். (எ-161)

# வாசகர் திருமுகம்

## கல் உடைக்கும் ஆலைகளால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு

கோப்பாய் இராசபாதை வீதியினையும் அதனை அண்டிய பகுதியினையும் எவரும் அறியாமல் இருக்கமாட்டார்கள். ஏனெனில், அங்குதான் நன்னீர் வளமும், பயிர்ச்செய்கை நிலமான சிவப்புமண் நிறைந்த இடமும் உள்ளது. அதுமட்டும் அல்லாமல் அங்குதான் கல்வியியற் கல்லூரி மற்றும் புனித இடமான கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லமும் அமைந்துள்ளன.

ஆனால், இத்தனை சிறப்புக்களையும் கெடுக்கும் விதத்தில் இங்குள்ள கல்உடைக்கும் ஆலைகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இன்று நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலை காரணமாக பெருமளவு மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை இங்கு மும்முரமாக செய்து வருகின்றனர்.

ஆனால், இக்கல்லுடைக்கும் ஆலைகளில் இருந்து வெளிவரும் தூசிப்படலம் விவசாயிகளின் விளைச்சலை மட்டும் அல்லாது நீண்டகாலப் பகுதியில் இவ்விவசாய நிலங்களையும், நன்னீர் கிணறுகளையும் பாழாக்குகின்றது.

இப்பொழுது கல்வியியற்கல்லூரி தனது முழுச்செயற்பாடுகளையும் இங்கு தொடங்கியதன் காரணமாகவும் மற்றும் தென்பகுதி மக்கள், வெளிநாட்டு பிரஜைகள் போன்றோர் மாவீரர் துயிலும் இல்லத்தை பார்வையிட வருவதாலும் இவ்வீதி பெரும் சனநடமாட்டம் கூடியதாக உள்ளது. ஆனால், கல்லுடைக்கும் ஆலைகளில் இருந்துவரும் தூசிகளினால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

முக்கிய விடயமாக இக்கல்லுடைக்கும் ஆலைகளுக்கான தொழில் உரிமம் வழங்குவதை ஏற்கனவே பிரதேச செயலகம் நிறுத்திவிட்டது. இருந்தும், இதன் உரிமையாளர்கள் இலாபநோக்கம் கருதி மீண்டும் அதே இடத்தில் செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது. அதுமட்டும் அல்லாமல் மேலும் புதிய ஆலைகள் நிறுவுவதிலும் ஈடுபட்டுள்ளனர். தயவு செய்து இது தொடர்பாக சுற்றுச்சூழல் கண்காணிப்புக் குழுவினர், தமிழீழ விடுதலைப் புலிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் உரிய நடவடிக்கையினை விரைவாக எடுப்பார்கள் என நினைக்கின்றேன்.

கருணா.

## தபால்மூலம் அனுப்பப்பட்ட வீடியோ நாடா எங்கே?

திருமண ஒளிப்பதிவு நாடாக்கள் (Vedio Cassette) மூன்று 26.02.2001 யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தினால் பதிவுத் தபால் மூலம் உரிய இராணுவ சோதனைகளின் பின் கனடா, திருகோணமலை, கிளிநொச்சி விலாசதாரர்களுக்கு அனுப்பப்பட்டன. கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்ட கொப்பி இன்றுவரை உரிய முகவரியாளருக்கு விநியோகிக்கப்படவில்லை.

இதுவிடயமாக முறைப்பாடுகளில் பதில் கிட்டாத நிலையில் 19.11.2001இல் பதிவுத்தபால் மூலம் முறைப்பாடு செய்ததனால் யாழ் தபாலதிபரால் 22.12.2001 திகதிய கடிதமூலம் (Vedio Cassette has been taken by secusuty forees at vavuniya P.O.) 'வவுனியா தபாலகத்தில் படக்கொப்பி இராணுவத்தினால் எடுக்கப்பட்டது' எனப்பதில் தரப்பட்டது.

மேலும் 30.01.2002 கடிதத்திற்கும், ஞாபகமூட்டும் கடிதங்களுக்கும் பதில கிடைக்காததால் கொழும்பு தபால் மா அதிபருக்கு 29.9.2002இல் பதிவுத் தபால் மூலம் முறையிட்டதனால் 'இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் தபால் திணைக்கள அத்தியட்சகர் பதில் தருவார்' என 07.10.2002 கடிதத்தினால் பதில் கிடைத்தது. தொடர்ந்து தபால் அத்தியட்சகரால் எனது மாதாந்த ஞாபகமூட்டும் சாதாரண கடிதங்களுக்குப்பதில் தராததால் 08.03.2003 பதிவுத்தபால் எழுதியதற்கு 'Action in Process You will be in formed' என 19.03.2003 கடிதமூலம் பதில் தரப்பட்டது. அதன் பின் மாதாந்தமும் இறுதியாக 15.09.2003இல் என்னால் அனுப்பப்பட்ட சாதாரண கடிதத்திற்கும் இன்றுவரை பதில் கிடைக்கவில்லை.

01. 26.02.2001 அனுப்பிய ரூபா 500 பெறுமதியான பொருளுக்கு31 மாதங்களின் பின்னும் மேலும் அவகாசம் தேவைதானா விசாரணை செய்வதற்கு?

2. ஞாபகமூட்டும் கடிதங்கள் பதிவுசெய்து அனுப்பப்பட்டால் தான் பதிலை எதிர்பார்க்கலாமா?

3. தபால் திணைக்களத்தின் ஆரம்பகாலம் முதல் பதிவுத்தபால் நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூபா 25/= இன்னும் நடைமுறையில் உள்ளது. முறைப்பாட்டுப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட நஷ்டத்தொகையை (படக்கொப்பி திரும்ப பெற்றுத்தராத பட்சத்தில்) நீதியானது எனக்கொள்ள நடைமுறைச்சட்டத்தை மீள்பரிசீலனைசெய்து வரியிறுப்பாளர்களை திணைக்களத்தில் நம்பிக்கை வைக்கச் செய்வார்களா?

4. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் "fustice delayed is justice denied" என்ற முதுமொழிக்கமைய விரக்தியுற்ற எனது நிலைமையைப் புரிந்து செயலாற்றுவார்களா?

ஆதாரம்: யாழ்ப்பாணம் தபால் திணைக்கள அத்தியட்சகரின் கடிதம் CADSJA/ 6232/ 2002

தபால் மாஅதிபர் QB/ 151/2002
2002/10/07

கரவெட்டி, செ.செல்வத்துரை



மனத்தினை ஒருநிலைப்படுத்தும் தியான வகுப்பு யாழ். அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கு யாழ். சர்வோதயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சர்வோதய இணைப்பாளர் கே.கனகரத்தினம் உரையாற்றுவதையும், சர்வோதய தியான இணைப்பாளர் குணபால உக்கல விஸ்வநைக்ரன் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

# பிரசவத்துக்கு ஆண் துணையுடன் வருமாறு சவூதி கண்டிப்பான உத்தரவு

சவூதி அரேபியாவில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஆண்துணையுடன் வந்தால் மட்டுமே பெண்கள் பிரசவத்திற்காக சேர்க்கப்படுவர் என்று அந்நாட்டு அரசு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து மருத்துமனைகளுக்கும் இந்த உத்தரவு குறித்து அரசு அறிவித்துள்ளது.

தாய்க்கும், குழந்தைக்கும் பொறுப பேற்கிறேன் என்று துணையாக வரும் ஆண், உறுதியளிக்கவேண்டும். அதன் பின்னரே பிரசவத்திற்காக பெண்ணை சேர்க்கவேண்டும் என்று மருத்துவமனைகளுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

சவூதி அரேபியத் துணை சுகாதார அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

திருமணமாகாத பெண்கள் தகாத உறவு மூலம் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை மருத்துமனைகளிலேயே விட்டுவிட்டுச் செல்வதால் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

துணைக்கு வரும் ஆண், சவூதி அரேபியா வழங்கியுள்ள அடையாள அட்டையின் நகலை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டும். அது அந்தப் பெண்ணின் மருத்துவக் கோப்புடன் இணைக்கப்படும்.

# வாழ்க்கையில் உயர்வதற்கு ஊனம் ஒரு தடையல்ல




தமிழகத்தின் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தொலைதூர எம்.பி.ஏ. படிப்பிற்கு கால்களால் நுழைவுத் தேர்வு எழுதினார் மாணவி ஜெனிஃபர்.

வாழ்க்கையில் உயர்வதற்கு ஊனம் கூட ஒரு தடையாக இல்லை என்பதை நிரூபித்துள்ளார் ஜெனிஃபர்.சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் இவரது சொந்த ஊர்.இவரது தந்தை முகம்மது அலி மஸ்கட்டில் பணிபுரிந்து வருகிறார். தாயார் நபீசியாவுடன் தற்போது காரைக்குடியில் வசித்து வரும் இவர் இரண்டு கைகளும், விரல்களும் பிறவியிலேயே ஊனமாகப் பிறந்தவர். மற்ற குழந்தைகளைப் போல ஆரம்ப வகுப்பில் ஜெனிஃபரைச் சேர்த்தனர் அவரது பெற்றோர். அன்று முதல் கால்களாலேயே எழுதப் பழகியதாக ஜெனிஃபர் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:- கைகள் இரண்டும் வளைந்து பிறந்த நான் கால்களால் எழுதப் பழகினேன்.

10 ஆம் வகுப்பில் 62 சதவீதமும், 12 ஆம் வகுப்பில் 65 சதவீதமும் மதிப்பெண்கள் பெற்றுள்ளேன்.காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பி.பி.ஏ. பாடத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். தற்போது எம்.பி.ஏ படிப்பிற்காக நுழைவுத்தேர்வு எழுதியுள்ளேன்.அதன் பின்னர் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ நிர்வாகத் துறையில் பணியாற்றுவேன். எனது தோழிகள் எனக்கு உற்ற துணையாக இருக்கின்றனர் என்றார்.

# விற்பனையை அதிகரிக்க ஆபத்தான உத்தி


சீனாவில் இளைஞர் ஒருவர் தனது வியாபாரத்தை அதிகரிக்க ஓர் ஆபத்தான உத்தியைக் கடைப்பிடித்தார். அது அவரை பொலீஸில் சிக்க வைத்தது.

சீனாவில் ஹினான் மாகாணம் ர்யாங் நகரில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை விற்பனை செய்து வந்தார் காவோ கியான் (வயது 27). அவருக்கு சரியாக வியாபாரம் நடக்கவில்லை. வியாபாரத்தைப் பெருக்க என்ன செய்வது என்று யோசித்தார்.அவருக்குத் தோன்றியது ஓர் ஆபத்தான யோசனை.

அந்த ஊரில் உள்ள நீர்த்தேக்கத்தில் பூச்சி கொல்லி மருந்தைக் கலந்தார்.இதனால் தண்ணீர் விஷத்தன்மையானது. அந்தத் தண்ணீரைக் குடித்த 64 பேர் பாதிக்கப்பட்டனர். அதில் 42 பேர்மருததுவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அந்தத் தண்ணீர் 9 ஆயிரம் வீடுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. தண்ணீரைப் பரிசோதித்த பொலீஸாருக்கு அதில் பூச்சி கொல்லி மருந்து கலந்திருப்பது தெரியவந்தது. வியாபாரத்தை அதிகரிக்க பூச்சிகொல்லி மருந்தை நீர்த்தேக்கத்தில் கலந்ததாக விசாரணையின் போது காவோ கியான் போலீஸில் ஒப்புக்கொண்டார்.

# கவர்ச்சிப் பாடகியின் சாதனை




பிரபல ஆங்கிலப் பாடகி மடோனா வெளியிட்ட சிறுவர்களுக்கான புத்தகம் விற்பனையில் சாதனை படைத்துள்ளது.'ஆங்கில ரோஜாக்கள்' (The English Roses) என்ற புத்தகம் உலக அளவில் 50 லட்சம் பிரதிகள் விற்கப்பட்டுள்ளதாகவும் தற்போதும் அதன் விற்பனை தொடர்வதாகவும் அமெரிக்க வெளியீட்டாளரான நிக்கலஸ் கல்வே தெரிவித்தார். பிரிட்டனில் மட்டும் ஒருவாரத்தில் 8 ஆயிரம் பிரதிகள் விற்கப்பட்டுள்ளதாகவும் இப்புத்தகம் 50 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார். பாடலால் மட்டுமன்றி கவர்ச்சியாலும் ஏராளமான ரசிகர்களை கவர்ந்த மடோனாவின் இரண்டாவது புத்தகம் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

★★★

# நோயாளியின் வயிற்றில் துவாய்: நஷ்டஈடு வழங்க உத்தரவு

அறுவைச் சிகிச்சையின்போது நோயாளியின் வயிற்றில் துவாயை வைத்து தைத்துவிட்ட டாக்டர் ரூ.4.54 கோடி நஷ்ட ஈடு தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளானவர் வில்லியம் பார்லோ (வயது 62) அமெரிக்காவின் மியாமி பகுதியைச் சேர்ந்தவர். ரத்தத்தில் தொற்று மற்றும் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்றபோது அவருக்கு இத்தகைய கொடுமையான அனுபவம் நேரிட்டது. 2000 ஆம் ஆண்டு டிசம்பரில் சத்திர சிகிச்சை நடைபெற்றது. நோய் தீராத நிலையில் மீண்டும் மருத்துவமனையை நாடினார். விளைவாக 4 மாதம் கழித்து மீண்டும் அறுவைச் சிகிச்சை செய்து துவாயை அப்புறப்படுத்தினர்.

டாக்டர் மீது வழக்குத் தொடரப்பட்டது. நோயாளியின் வயிற்றில் துவாயை மறதியாக வைத்து தைத்துவிட்டதாக டாக்டர் ஒப்புக்கொண்டார்.

# பரீட்சையில் கோட்டை விட்ட பயத்தால் பாடசாலையை மூடமுயற்சித்த மாணவிகள்

பரீட்சையில் தோல்வி அடைந்த சகோதரர்களின் தூண்டுதலின் பேரில், வெடிகுண்டு மிரட்டல் விடுத்து பாடசாலையை மூடவைத்த 2 மாணவிகள் பொலீஸாரிடம் சிக்கினார்கள்.

தமிழகத்தின் சென்னை கொடுங்கையூரில் நடந்த பரபரப்பான இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை பொலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு மர்மத் தொலைபேசி அழைப்பு வந்தது. மறுமுனையில் சிறுமி ஒருத்தி பேசினாள்.

கொடுங்கையூர் டொன்பாஸ்கோ பாடசாலையில் வெடிகுண்டு வெடிக்கப் போகிறது என்று கூறிவிட்டு அந்தச் சிறுமி தொடர்பைத் துண்டித்துவிட்டாள்.

உடனே, பொலீஸார் பரபரப்பானார்கள் வெடிகுண்டு நிபுணர்கள் சகிதம் பாடாசாலைக்குச் சென்று சோதனை போட்டனர். மாணவ-மாணவிகள் வெளியேற்றப்பட்டனர்.

சோதனையில் வெடிகுண்டு ஏதும் சிக்கவில்லை. வெறும் புரளி என்று தெரியவந்தது. உடனே மீண்டும் பாடம் நடத்தத் தொடங்கினார்கள் ஆசிரியர்கள்.

பாடம் தொடங்கிய சிறிது நேரத்தில் பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு சிறுமி மீண்டும் தொலைபேசியில் பேசினாள்.

டொன்பாஸ்கோ பாடசாலையில் பொலீஸார் சரியாக சோதனை போடவில்லை. குண்டு இருக்கிறது. பாடசாலையை மூடிவிட்டு ஒழுங்காக சோதனை போடச் சொல்லுங்கள் என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டாள் அந்தச் சிறுமி.

இதனால், பொலீஸார் மீண்டும் பரபரப்பானார்கள். இந்த முறை பாடசாலையை மூடச் சொல்லி, மாணவ-மாணவிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு சோதனை போட்டனர் பொலிஸார்.

இந்தத் தடவையும் குண்டு ஏதும் சிக்கவில்லை. தொலைபேசியில் வந்த தகவல் புரளி என்று தெரியவந்தது.

வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சிறுமி யார்? என்று பொலீஸார் அதிரடி விசாரணையைத் தொடங்கினார்கள்.

பொலீஸ் கட்டுப்பாட்டு அறை தொலைபேசியில் பேசப்படும் தொலைபேசி எண்ணைக் கண்டுபிடிக்கும் கருவி உள்ளது.

அதன் மூலம் சிறுமிகள் இருவரும் பேசிய தொலைபேசி எண்ணை பொலீஸார் கண்டுபிடித்தனர். மிரட்டல் விடுத்தவர்கள் மாணவிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டனர்.

உடனே, அந்த இரண்டு மாணவிகளையும் பொலீஸார் பிடித்தனர். ஒரு மாணவி பிளஸ்-2 படிப்பவர். இன்னொரு மாணவி 11வயதானவர். என்றாலும் 1ஆவது வகுப்பில்தான் படிக்கிறார். தொடர்ந்து 5முறை பெயிலாகி 1ஆவது வகுப்பை தாண்டாமலேயே இருக்கிறார்.

பொலீஸாரிடம் மாட்டியதும் 2 மாணவிகளும் கதறி அழத் தொடங்கிவிட்டனர்.

அந்த மாணவிகள் சகோதரர்களும் அதே பாடசாலையில்தான் படித்தனர். அவர்கள் காலாண்டு பரீட்சையில் நல்ல புள்ளிகள் வாங்காமல் தோல்வி அடைந்து வந்தனர். இதனால், விடுமுறை முடிந்து பாடசாலைக்குப் போகும்போது ஆசிரியர்கள் திட்டுவார்கள் என்று பயந்தனர்.

தங்கள் சகோதரிகளிடம் சொல்லி, பொலீஸுக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, குண்டு வெடிக்கப் போவதாக சொல்லுங்கள். பொலீஸ் வந்து பாடசாலையை மூடவைத்து விடுவார்கள். ஆசிரியர்களிடம் திட்டு வாங்குவதிலிருந்து ஒரு நாள் தப்பிக்கலாம் என்று திட்டமிட்டனர்.

இரண்டு மாணவிகளும் பொலீஸாரிடம் கதறி அழுது மன்னிப்பு கோரினார்கள்.

ஒரு மாணவிக்கு பெற்றோர்கள் இல்லை. இன்னொரு மாணவியின் பெற்றோர்கள் மனநோயளிகள். இரண்டு மாணவிகளும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் குடும்ப சூழ்நிலை கருதியும், அவர்களின் படிப்புக் கருதியும், பொலஸார் எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

★

## யுரேனஸ் கிரகத்துக்கு 24 சந்திரன்கள்

பூமியைப் போல், சூரியனைச் சுற்றிவரும் யுரேனஸ் கிரகத்துக்கு 22 சந்திரன்கள் உள்ளன என்று ஏற்கனவே விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அக்கிரகத்துக்கு மேலும் 2 சந்திரன்கள் இருப்பதை விண்ணில் மிதந்துகொண்டிருக்கும் ஹபிள் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ளது. அந்த இரண்டையும் சேர்த்து யுரேனஸ் கிரகத்தைச் சுற்றிவரும் நிலவுகளின் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துவிட்டது.

தொகுப்பு: மதுமதி

# அக்கரைச் சீமையிலே...

# 'ஜேம்ஸ் பொண்ட்'க்கு விருது



முன்னாள் "ஜேம்ஸ் பொண்ட்" நடிகர் ரொஜர் மூர் (வயது 75) பிரிட்டிஷ் மகாராணியால் 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பக்கிங்ஹாம் அரண்மனையில் இடம் பெற்ற விசேடநிகழ்ச்சியில் பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் ரொஜர் மூருக்கு 'சேர்' பட்டத்தை வழங்கினார்."ஜேம்ஸ் பொண்ட்" திரைப்படங்களின் வரிசையில் நடிகர் சேர்சீன் கொனரிக்கு பின்னர் 'ஜேம்ஸ் பொண்ட்' பாத்திரத்தை தாங்கி நடித்தவர் ரொஜர்மூர். இவர் ஏழு ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்களில் நடித்தார். ரொஜர் மூரின் சமூக சேவைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் 'யுனிசெவ்' அமைப்பின் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் பாடசாலைகளில் தமிழ்

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள அரசு உயர்நிலைப்பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் அங்கீகாரத்தை கலிபோர்னியா தமிழ் பயிற்சியகம் பெற்றுள்ளது. இதன்படி முதல் கட்டமாக கலிபோர்னியாவைச் சேர்ந்த க்யூபர்டினோ மற்றும் சன்னிவேல் ஆகிய பகுதிகளில் உள்ள அரசுப் பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கப்படும்.

அமெரிக்காவில்அரசுப் பாடசாலைகளில் தமிழ் வகுப்புகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ள முதல் கல்வி நிறுவனம் கலிபோர்னியா தமிழ் பயிற்சியகம். கடந்த 3 ஆண்டுகளாக இதற்கான முயற்சி எடுத்து இதில் தமிழ் பயிற்சியகம் வெற்றி கண்டுள்ளது.

# லாராவின் உலக சாதனையை மத்தியூ ஹைடன் முறியடித்தார்!

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மத்தியூ ஹைடன், டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் 380 ஓட்டங்களைக் குவித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

ஸிம்பாப்வே அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலேயே இச்சாதனையைப் படைத்தார் ஹைடன்.

இதுவரை மேற்கிந்திய வீரர் பிரையன் லாரா 375 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை படைத்திருந்தார்.

ஆஸ்திரேலிய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பேர்த் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வென்ற ஸிம்பாப்வே அணி, ஆஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஜஸ்ரின் லாங்கர் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ரிக்கி பொன்ரிங் 37 ஓட்டங்களுடனும் டேமியன் மார்ட்டின் 53 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

முதல் நாள் ஆட்டமுடிவின் போது ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 372 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மத்தியூ ஹைடன் 183 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ஸ்ரீவ்வோ 61 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஸ்ரீவ்வோ 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்தியூ ஹைடன் தனது இரட்டைச் சதம், முச்சதத்தைக் கடந்து, பிரையன் லாராவின் உலக சாதனையையும் முறியடித்தார்.

தேநீர் இடைவேளையின் போது 376 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார் ஹைடன், அப்போது ஆஸ்திரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 731 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

எனினும், ஹைடன் 400 ஓட்டங்களைக் கடப்பதற்காக தொடர்ந்தும் ஆஸி. அணியை துடுப்பெடுத்தாடச் செய்தார் ஸ்ரீவ்வோ.

ஆனால், மீண்டும் ஆட்டம் ஆரம்பமானவுடன் முதலாவது ஓவரிலேயே ஹைடன் ஆட்டமிழந்தார். அப்போது அவர் 380 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அத்துடன், ஆஸி. அணி, துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது.

1993ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிராக 375 ஓட்டங்களைப் பெற்று மேற்கிந்திய வீரர் பிறையன் லாரா உலக சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டொனால்ட் பிரட்மன், மார்க் டெய்லர் ஆகியோர் 334 ஓட்டங்களைப் பெற்று இதுவரை டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலிய வீரர்களாக விளங்கினர்.

31 வயதான ஹைடன், இதுவரை 15 டெஸ்ட் சதங்களையும், 45 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார்.

2001ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிராகப் பெற்ற 203 ஓட்டங்களே ஹைடனின் முந்தைய அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

இதேவேளை, ஸிம்பாப்வேயுடனான முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்ட் அதிரடியாக துடுப்பெடுத்தாடி சதம் குவித்தார்.

ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களைப் பெற்ற அவர், தனது சதத்தை 84 பந்துவீச்சுக்களில் பூர்த்தி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## வஸீம் அக்கரமிற்கு கௌரவம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான வஸிம் அக்ரமை அந்நாட்டு கிரிக்கெட் சபை கௌரவிக்கவுள்ளது.

தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5ஆவது ஒருநாள் போட்டி நாளை ராவல் பிண்டியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி வஸிம் அக்கரமிற்கு சமர்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இப்போட்டியின்போது வஸிம் அக்ரம், தனது கிரிக்கெட் சேவைகளுக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார். விசேட பரிசொன்றும் அவருக்கு வழங்கப்படவுள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகள் ஆகிய இருவகைப் போட்டிகளிலும் 400இற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரேயொரு வீரர் அக்ரம் ஆவார்.

"எனக்காக பிரியாவிடை வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"இவ்வாறான நிகழ்வு நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்த ஒவ்வொருவருக்கும் உற்சாகமளிக்கும்" - இவ்வாறு வஸிம் கூறியுள்ளார்.




வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 19வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி வலைப்பந்தாட்ட அணியினரைப் படத்தில் காணலாம்.

## யாழ். கல்வி வலய அணிகளின் உதைபந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

3ஆம் இடத்திற்கான ஆட்டம்-

**14 வயதுப் பிரிவு**

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் நாவாந்துறை றோ.க.பாடசாலை.

**16 வயதுப் பிரிவு**

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

***இறுதியாட்டங்கள்***

**14 வயதுப் பிரிவு**

★ புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக்கல்லூரி.

**16 வயதுப் பிரிவு**

★ புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க. வித்தியாலம்.

இதேவேளை -

இன்று காலை 8.30 மணிமுதல் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 18 வயதுப்பிரிவினருக்கான கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் எதிர் யாழ். மத்திய கல்லூரி.

★ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம். (ஐ-5)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினர் அமரர் விபுலானந்தர் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட ரீதியில் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை கல்லூரியில் ஒப்படைக்க வேண்டுமென கல்லூரி மாணவ முதல்வர் சபையினர் கேட்டுள்ளனர்.

சாயி துணை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நண்பி

செல்வி

மஞ்சுளாதேவி தனபாலன்

அவர்கள் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக நியமனம் பெற்றதையிட்டு நாம் அவரைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று உயர்நிலை பெற உளமார உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

(23518) (11-16)

- நண்பர்கள்.

## முக்கிய அறிவித்தல்

***மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)***

### 31.12.2002 மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தில் 31.12.2002 இல் முடிவடையும் நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதனால் சங்கத்துடன் தொடர்புடையவர்கள், கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் மேற்குறிப்பிட்ட திகதியில் தமது மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும். குறிப்பிட்ட கிராமிய வங்கியில் கணக்குகளை வைத்திருப்போர் பின்வரும் திகதிகளில் கிராமிய வங்கியில் கையேடுகளைச் சமர்ப்பித்து கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

| காலம் | | நேரம் |
|---|---|---|
| 13.10.2003 | திங்கள் | 9.00 - 3.30 |
| 14.10.2003 | செவ்வாய் | 9.00 - 3.30 |
| 15.10.2003 | புதன் | 9.00 - 3.30 |
| 16.10.2003 | வியாழன் | 9.00 - 3.30 |
| 17.10.2003 | வெள்ளி | 9.00 - 3.30 |

(சி 30647) (22-11-16)

மா.செல்வராசா
*தலைவர்*

வை.கைலைநாதன்
*கணக்காய்வாளர்*

## விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### அறிவித்தல்

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு (இரண்டாம் அரையாண்டு) 2003 & 2003 (A)

மேற்படி தேர்வு 24.11.2003ஆம் திகதி ஆரம்பமாகும்.

மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி விண்ணப்பப்படிவங்களை உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் 31.10.2003ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி விண்ணப்பப் படிவங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை நடைபெறும் அலகுகளின் விவரத்தையும் நேர அட்டவணையையும் விஞ்ஞானபீட அறிவிப்புப் பலகைகளல் பார்வையிடலாம்.

(C/30646) (22-11-16)

- பதிவாளர்.

## இடம்மாற்றம்

மூளாய் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த வேல்முருகன் சித்த ஆயுள்வேத வைத்தியசாலை தற்போது தொல்புரம் மேற்கு, கலைவாணி சனசமூக நிலையத்துக்கு அருகாக இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

குறிப்பு : *மூளாய் சித்திவிநாயகர், தபாற் பெட்டி ஒழுங்கை ஊடாக இடப்பக்கமாக வரவும்.*

*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

(23516) (11-16)

ஆயுர்வேத டாக்டரும்
சமாதான நீதிவானும்
கி.தவமணிதேவி.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### பொன்னம்பலம் சிவஞானசுந்தரம்

(பிரபல புகையிலை வர்த்தகர், மண்டைதீவு)

திதி : 11.10.2003

*ஆண்டுகள் இரண்டு சென்றாலும் எங்கள் பாச தீபத்தின் நினைவலைகள் என்றும் அழியாது.*

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர்

அமரர்

### சு.பு.கணபதிப்பிள்ளை

அவர்கள் 09.10.2003 இல் இயற்கை எய்தியதை அறிந்து மிகுந்த துயருறுகிறோம். அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். பிரிவாற்றாது தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*யா/யூறிபேர்க் கல்லூரி,*
சாவகச்சேரி.

(23524) (22-11-16)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.


நிலவு.COM இன்
தமிழ் கணினி 2003
ஊடக அனுசரணை : உதயன்
(சி-30629)(22-16-11)

# கலைப்பேரரசின் மறைவு நாடகத்துறைக்கு பேரிழப்பு
## துர்காதுரந்தரி அனுதாபம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

கலைப்பேரரசின் மறைவு ஈழத்து நாடகத்துறைக்கு பேரிழப்பு.

- இவ்வாறு தெரிவிததுள்ளார் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுததுரையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து சிவத்தமிழ்ச் செல்வி விடுத்த அனுதாபச் செய்தி வருமாறு:-

குரும்பசிட்டி தந்த கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஐயா அவர்களின் மறைவு எம்மையெல்லாம் மீளாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. ஈழத்து நாடகக்கலை வளர்ச்சியில் தமக்கென ஒரு சிறப்பிடம் பெற்றவர் இவர்.

ஆசிரியராக, அதிபராக, நாடகத் தயாரிப்பாளராக, நடிகராக, திறனாய்வாளராக, ஒரு சிறந்த எழுத்தாளராகவும் பரிணமித்த கலைப்பேரரசு எமது துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகளின் நாடக, கலைபண்பாட்டு வளர்ச்சிக்கு முன்னின்றவர்.

பிள்ளைகளின் பரிசளிப்பு விழாக்களில் நாடகங்களை அரங்கேற்றி கலை ஆர்வத்தை ஆர்வலர்களுக்கு காட்டி பெருமை சேர்த்தவர். இவர் அரங்கேற்றிய நாடகங்களில் 'மயில் நாடகம்' அனைவரது பாராட்டையும் பெற்றது.

அன்னாரின் மறைவு எங்கள் பிள்ளைகளின் கலைவளர்ச்சிக்கும், ஈழத்து நாடகத்துறைக்கும் பேரிழப்பாகும். அவரின் மறைவினால் கவலை கொண்டிருக்கும் குடும்பத்தினருக்கும், நாடகத்துறையினருக்கும் எனது சார்பிலும் தேவஸ்தானம், மகளிர் இல்லத்தின் சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன். - என்று அதில் உள்ளது.

(எ)

### களப்பயிற்சி

யாழ்.பல்கலைக்கழக திட்டமிடல் பிரிவு முதலாம் ஆண்டு மாணவர்கள் இன்று காலை முதல் மாலை வரை களப்பயிற்சியில் ஈடுபடவிருக்கின்றனர்.

புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் விரிவுரையாளர்களான என்சண்முகலிங்கம், சூசை ஆனந்தன் ஆகியோரின் மேற்பார்வையில் 80 மாணவர்கள் இக்களப் பயிற்சியில் ஈடுபடுவர்.

(ம-3)

மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

01-10-2003 முதல் 24-10-2003 வரை
தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

※ நவ நாகரீக நங்கையர் விரும்பும் நவீன டிசைன் துணிவகைகள்
※ அழகுக்கு அழகூட்டும் சாறிவகைகள்
※ றெடிமெட் ஆடைத்தினுசுகள்
※ ஆடவர்க்கேற்ற சேட், சூட் வகைகள்

சகல பொருள்களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்



மலிவு விலையில் பெற்றிட
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎222 2381.
(25-11-14-31) (C/30650)

மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

# கண்ணீர் அஞ்சலி



மஹாவித்துவான் அமரர் ந.வீரமணி ஐயா அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் மறைவு இசைத்தமிழ், கலை உலகிற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. மேலும் அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ணசர்மா (ஆயாக்கடவை),
பிரம்மஸ்ரீ பா.சுந்தரராஜாசர்மா (ஆயாக்கடவை),
பிரம்மஸ்ரீ தி.சோமநாதசர்மா,
பிரம்மஸ்ரீ சி.கிருஷ்ணசாமிகுருக்கள்,
- புன்னாலைக்கட்டுவன்.

(23530) (29-11-17)

# பிரிவின் துயருடன்...

நாடகக் கலையுலகில் நற்கலைஞனாகவும், எமது மன்றத்தின் அரங்க முயற்சிகள் பலவற்றோடு துணைநின்றவருமான



'கலைப்பேரரசு'

## ஏ.ரி. பொன்னுத்துரை

அவர்களின் மறைவால் துயருறுகின்றோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதேவேளை, அவரின் பிரிவால் துயருறும் குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-30651)(11-14-31)

இயக்குநர், அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்.

# துயர் பகிர்கின்றோம்



எமது அன்புக்குரிய ஆசானும்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பெறியியலாளருமான
உயர்திரு. தயாபரன்
அவர்களின் அன்புக்குரிய
மாமனாரான
கலைப் பேரரசு

## ஏ.ரி.பொன்னுத்துரை

அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது ஆறாத்துயரில் நாமும் பங்குகொள்வதோடு ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணிய அளவையியல்
2ஆம் வருட மாணவர்கள்
(Q.S. II[nd] Year)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி,
கொக்குவில். (C/30652) (22-11-14)

# மாகாண மட்டத்திலான எழுத்து போட்டி முடிவுகள்

யாழ்பாணம்,ஒக்.11

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆங்கில எழுத்துப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.-

மாகாண மட்டப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்டுள்ள இம்மாணவர்களுக்கான பரிசளிப்பு வைவம் எதிர் வரும் 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2மணிக்கு திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**பார்த்து எழுதுதல**

யு.சகானா (உடுவில் மகளிர் கல்லூரி - தரம் 8, (முதலாம் இடம்)

ஏ.அன்ரனி ஜசிந்தா (மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை - தரம் 11, 2ஆம் இடம்,)

இ.பீரிஸ் சுகிர்தனன் (சென். ஜோன்ஸ் கல்லூரி - தரம் 12. 2ஆம் இடம்)

ஏ.தர்சனா (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் - தரம் 3, 2ஆம் இடம்)

வி.மிதுலாஜினி (வட இந்துமகளிர கல்லூரி - தரம் 4, 2ஆம் இடம்)

எஸ். மிசியானா (வடஇந்து மகளிர் கல்லூரி - தரம் 5, 3ஆம் இடம்)

எஸ்.தர்மிலா (வட இந்து மகளிர் கல்லூரி தரம் 6, 3ஆம் இடம்.)

**ஆக்கக் கட்டுரை வரைதல**

எம்.கிருபரஞ்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி - தரம் 13, (முதலாம் இடம்)

ஹாசன் வரதராஜன் (வேம்படி மகளிர் கல்லூரி - தரம் 8, 2ஆம் இடம்)

பி.கார்த்திகா (உடுவில் மகளிர் கல்லூரி - தரம் 12, 2ஆம் இடம்)

ஜி.பிரதீபன் (ஹாட்லிக்கல்லூரி- தரம் 11, 3ஆம் இடம்)

எஸ்.சாந்தி (உடுவில் மகளிர் கலலூரி - தரம் 6, 3ஆம் இடம்)

நிசாந்திகா வாமசிவன் (வேம்படி மகளிர் கல்லூரி - தரம் 7, 3ஆம் இடம்)

**சொல்வதெழுதல்**

பிரியங்கரி சத்தியசீலன் (வேம்படி மகளிர் கல்லூரி - தரம் 11, முதலாம் இடம்), என். சாஜினி (இளவாலை கன்னியர் மடம் ம.வி. - தரம் 9, முதலாம் இடம்), எஸ்.தர்சிகா (யாழ்ப்பாணக்கல்லூரி) - தரம் 7, முதலாம் இடம்.

ரி. இனோதராணி (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - தரம் 12, 2ஆம் இடம்).

கலாமணி முரளிதரன் (நெல்லியடி மத்திய ம.வி. - தரம் 10, 2ஆம் இடம

ரி.டிலாணி (உடுவில் மகளிர் கல்லூரி - தரம் 8, 2ஆம் இடம்)

நிசாந்தி சிவானந்தன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி - தரம் 6, 3ஆம் இடம்).

(எ-9)

## தேவை

பெண் லிகிதர் ஒருவர் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 12.10.2003 ஞாயிறு காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்



விக்ரம், திரிஷா, விவேக் நடித்த
சாமி
காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(ரீல்ஸ்)
13.10.2003 முதல் ராமச்சந்திரா
(C/29898) (12-17-31)

நிறஞ்சனாஸ் சங்கானை
பாலா, தீபு, வடிவேல் நடித்த
அன்பு (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45 இற்கு
ஜக்கிஜான் நடித்த கராட்டிப்படம்
TUXE DO

லஷ்சுமி சினிமா இணுவில்
பிரசாந்த், ஷாலினி, வையாபுரி நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பி.நே)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நெல்லிநாதன் தேவராஜமலர்

திருமதி நெல்லிநாதன் தேவராஜமலர் நேற்று (10.10.2003) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நெல்லிநாதனின் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும் ஆனந்தியின் (சிறாப்பர், யாழ்.மாநகரசபை) அருமைத் தாயாரும் குலசேகரத்தின் (யாழ்.வலயம்) மாமியாரும் மதுரகன், குலமகள், திபாகரி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னார் அருமைநாயகம், சற்குணதேவி, காலஞ்சென்ற தர்மரத்தினம், பாலசுந்தரம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (11.10.2003) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு வில்லூன்றி இந்து மயானத்தில் நடைபெறும்.

*101/10,ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
Phone:222 5549 (23532) (29-11-17)

தகவல்:
ஆனந்தி குலசேகரம் (மகள்)

## சுப்பிரமணியம் இராசேந்திரம்

கீரிமலை, புதிய கொலனியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் இராசேந்திரம் (அண்ணையர்) அவர்கள் நேற்று (10.10.2003) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் குமுதினி (மல்லாவி), ரகுநாதன் (மல்லாகம்), தயாளினி (லண்டன்), யோகநாதன் (மாவீரர்), குகநாதன் (இணுவில்), ரவீந்திரநாதன் (மாவீரர்), ஜெகநாதன் (பாலநகர்), சுமதினி (பாலநகர்), நளினி (பாலநகர்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10மணியளவில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் கட்டை,*
*காலகண்டர் கோவில்,*
*மல்லாகம்.* (23527) (29-11-14-31)

தகவல்:
இ.ரகுநாதன் (மகன்).

## கணபதிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை நேற்று (10.10.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் பகீரதி (அமெரிக்கா), கௌசலா (ஆஸ்திரேலியா), ஜெயபாலன் (நடத்துநர், C.T.B.), சகுந்தலா (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), புஸ்பரூபா (முதலாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜேந்திரன் (அமெரிக்கா), ஸ்ரீ விக்னேஸ்வரதாஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2003) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூநாவடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*அராலி மத்தி,*
*வீரபத்திரர் கோவிலடி,*
*வட்டுக்கோட்டை.* (23325) (31-11-14)

தகவல்:
ச.ஜெயபாலன் (மகன்)
C.T.B.

## கந்தையா பொன்னையா

தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னையா நேற்று (10.10.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை, அப்புப்பிள்ளை, நல்லையா மற்றும் அன்னம் ஆகியோரின் மூத்த சகோதரரும் காலஞ்சென்ற இராசரத்தினம், அழகரத்தினம் மற்றும் த.செல்லையா, த.சேனாதி, அப்புத்துரை காலஞ்சென்ற பூரணம் மற்றும் மனோன்மணி, பொ.தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பொ.செல்வரத்தினம் (சுவிஸ்), பொ.துரைராசா (தொட்டிலடி), பா.அரியமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் அ.பாலச்சந்திரனின் அன்பு மாமனாரும் பா.துஸ்யந்தினி, பா.நிஷாந்தினி, பா.நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2003) சனிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செல்வகிரி'*
*தொட்டிலடி, சங்கானை.* (23326) (31-11-14)

தகவல்:
அ.பாலச்சந்திரன் (மருமகன்).

## கந்தையா ஆறுமுகம் (பொறியியலாளர்)

**(முன்னாள் மாவட்ட முகாமையாளர், இலங்கை மின்சார சபை)**

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் 09.10.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கனகராஜ் (லண்டன்), லோகினியின் (ஆஸ்திரேலியா) அன்புத் தந்தையும் கிருஷ்ணாணந்தி (லண்டன்), வசந்தராஜாவின் (ஆஸ்திரேலியா) மாமனாரும் தர்சன், சோபிதா, சாயிராவின் பேரனும் காலஞ்சென்ற அன்னபூரணம், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரன், நடராசா, காலஞ்சென்ற சங்கரபிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2003 செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
Mrs.P.ARUMUGAM,
23, GILLIGANS COURT,
ROWVILLE VIC 3178,
AUSTRALIA,
T.P.: 0061.397556393.

*விதானைவளவு,*
*அச்செழு, நீர்வேலி.*

தகவல்:
வே.நடராசா (மைத்துனர்).

(23523) (29-11-14-31)

# குடாநாட்டில் விபத்துக்களைக் குறைப்பதற்கு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிவு

குடாநாட்டில் விபத்துக்களைக் குறைக்க விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிகளை முறைப்படி நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கூட்டம் ஒன்றை நேற்றுக் கூட்டியிருந்தார். இக்கூட்டத்தில் 512 ஆவது படையணி அதிகாரி, யாழ்.போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸ் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மாநகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வடபிராந்திய போக்குவரத்து சபை ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் தனியார் பஸ் சங்கம், ஓட்டோச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

அங்கு தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ வீதிகளில் சமாந்தரமாக சைக்கிள்களில் செல்வதை முழுமையாகத் தடைசெய்தல்.

★ பாடசாலை மாணவர்கள் சமாந்தரமாகச் செல்லாது ஒரே நிரையில் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லவேண்டும்.

★ வாகனங்களைப் பிடித்துக்கொண்டு அதனருகே சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்லக்கூடாது.

★ தனியார் கல்வி நிறுவனங்களுக்கு முன்பாகச் சைக்கிளை நிறுத்த அனுமதிக்காமல், அதற்காக தனியான தரிப்பிடங்களை ஏற்படுத்தவேண்டும்.

★ நகரில் உள்ள வீதிகளின் கரையிலும், நடுவிலும் வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்த்து, தனி இடம் ஒதுக்கவேண்டும்.

★ வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நிதி உதவிகளைப் பெற்று, வீதிகளை அகலமாக்கவேண்டும்.

★ பாதசாரிகள் செல்வதற்கு தனியான நடைபாதை ஏற்படுத்தவேண்டும.

★ சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டடங்களை அகற்றவேண்டும். அது முடியாத பட்சத்தில் நீதிமன்ற உதவியை நாடலாம்.

★ ஓட்டோச் சாரதிகளுக்கு லைசன்ஸ் வழங்க விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

★ வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதிகளுக்கு முன்பு பயிற்சியளித்ததுபோன்று பயிற்சியை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

★ தனியார் பஸ் உரிமையாளர் தமது வாகனத்திற்கு காப்புறுதி செய்திருக்கவேண்டும்.

★ மினிபஸ் மற்றும் போக்குவரத்துச் சபை பஸ்கள் போட்டிபோட்டுக்கொண்டு சவாரி ஓடக்கூடாது. இரு தரப்பினரும் கலந்துரையாடி கால அட்டவணை ஒன்றைத் தயாரிக்கவேண்டும்.

★ மதுபோதையில் வாகனம் செலுத்துவது முற்றாகத் தடைசெய்யப்படும். மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும்.

இந்த நடைமுறைகளை விரைவில் அமுல்செய்ய நடவடிக்கை எடுப்பதென கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-3-5)



## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்

# இந்த ஆண்டு அதிக பெறுபேறு பெற்றால் கடந்த ஆண்டு பதிவை ரத்துச் செய்யலாம்

யாழ்ப்பாணம்,ஒக்11

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகளின்படி பல்கலைக்கழகங்களுக்குப் பதிவினை மேற்கொண்ட மாணவர்கள் இந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் அதிக பெறுபேற்றைப் பெற்றிருந்தால் ஏற்கனவே மேற்கொண்ட பதிவை ரத்துச்செய்ய முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு நடைபெற்ற பரீட்சையின் பெறுபேற்றை எதிர்பார்த்து 2002/2003 கல்வியாண்டில் தமக்குக் கிடைத்த பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்கள் அதே கல்வியாண்டிற்குப் பதிவை மேற்கொள்ளவும் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்பிரகாரம் பதிவை இரத்துச்செய்யவிரும்பும் மாணவர்கள் பல்கலைக்கழகப் பதிவாளர் ஊடாகவும் பதிவை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது கல்வித்துறைப் பீடாதிபதி ஊடாகவும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று யாழ்பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-10)

## இளம்பரிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாக படையினரின் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனால் படையினர் மற்றும் பொலீஸார் மீது பொதுமக்கள் கோபம் கொண்டுள்ளனர். இடையிடையே முறுகல் நிலையும் ஏற்படுகிறது. கடந்த சில தினங்களில் மட்டும் படையினரால் ஆறு வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

இவ்வாறான விபத்துக்கள் படையினரின் திட்டமிட்டு மேற்கொள்கின்றனர் என மக்கள் எண்ணுகின்றனர். படையினரின் இச்செயலைக் கட்டுப்படுத்தாது விட்டால் மக்களின் எதிர்ப்பலையை எவராலும் தடுக்கமுடியாது போகலாம் - என்வும் இளம்பரிதி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-8)

## கூட்டணியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை சேனாதிராஜா கலந்துகொள்கின்றார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டணியின் மூத்த உறுப்பினர்கள், தீவிர ஆதரவாளர்கள் ஆகியோர் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கூட்டணிக்குள் உள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வுகண்டு மீண்டும் அதனைப் பழையநிலைக்கு கட்டியெழுப்புவது தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்படவிருக்கிறது. (ம-3-5)

## இந்த ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் என தாம் நம்புவதாக பரிசுக்குழு தெரிவித்துள்ளது.

இந்தப் பரிசு சுமார் பதின்மூன்று லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்தது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இது கையளிக்கப்படும்.

நோபல் அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அந்தப் பரிசைப்பெறும் 11ஆவது பெண் இவராவார். (ம-8)

# ஊவா மா.ச. கூட்டத்தை எதிரணியினர் பகிஷ்கரிப்பு

ஊவா மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று ஆரம்பமானபோது, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் முனிரட்ண அத்தநாயக்க, ஆளும் தரப்பினருக்கு எதிரான 10 குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டு, சபை நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பதாக, சபைத் தலைவரிடம் நண்டதொரு மகஜரைச் சமர்ப்பித்தார்.

குற்றச்சாட்டுக்கள் குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், 2004ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட விவாதத்திலும் கலந்துகொள்வதில்லை எனவும் எதிரணியினர் தீர்மானித்துள்ளனர்.

## யாழ். ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகரன் அந்தப் பகுதிக்குச் நேற்று மாலை 4.30 மணிக்குச் சென்றார்.

மண்டையோடு காணப்பட்ட பகுதி மேலோட்டமாக நீதிவான் முன்னிலையில் தோண்டப்பட்டது. அப்போது மண்டையோட்டுடன் சில மனித எச்சங்களும் மீட்கப்பட்டன. அதற்கு மேல் அந்தப் பகுதியில் மனித எச்சங்கள் காணப்பட்டதால் தோண்டும் பணி நிறுத்தப்பட்டது.

மீட்கப்பட்ட எச்சங்களை இரசாயனப்பகுப்பாய்வு மற்றும் மரபணுப் பரிசோதனைக்கு அனுப்பப்படும் என்றும் - அந்த எச்சங்கள் ஒருவர் அல்லது பலரது எச்சங்கள் என இனங்காணப்படும் பட்சத்தில் முழுமையாகத் தோண்டும் பணி மேற்கொள்ளப்படும் என்றும் - நீதிவான் தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரை அந்தப்பகுதிக்கு பொலீஸ் காவல் ஏற்பாடு செய்யும்படி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தவிர வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல அனுதிக்கக்கூடாது என்றும் பொலீஸாருக்கு உத்தரவு வழங்கப்பட்டது. (ம-9-30)

**கோப்பாயில்**
**நேற்று இடம் பெற்ற தமிழீழப் பெண்கள் எழுச்சி நிகழ்வு மற்றும் 2ஆம் லெப். மாலதயின் நினைவுதின நிகழ்வுகளில் கலந்து கொண்ட சிறுமி ஒருத்தியையும், நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.**

# தமிழீழப் பெண்கள் எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈகச்சுடரினை மாவீரர் நாராயணனின் தாயாரான திருமதி சபாநாயகம் பசுபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப் படத்துக்கு யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலின்பன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நடனம் நாடகம், ஆகிய கலைநிகழ்வுகளும் பெண்களின் நாதஸ்வர, நவில் கச்சேரியும் நினைவுரைகளும் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். இறுதியாக இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

இதேவேளை - 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16ஆவது நினைவு தினத்தையொட்டி நேற்றுக்காலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியினை பொதுஅமைப்புகளின் பொறுப்பாளர் சுதாஸ் ஏற்றிவைத்தார்.

அதிக எண்ணிக்கையான போராளிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**வன்னி**

தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகள் கிளிநொச்சியில் பேரணியுடன் நடைபெற்றன.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் பேரணி ஆரம்பமானது. இசை அணிவகுப்புடன் 2ஆம் லெப்.மாலதியின் திருவுருவப்படம் தாங்கியவாறு பெண்கள் முன்னேவர தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியின் மாதிரிகள், சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகள் ஆகியவற்றைத் தாங்கியவாறு ஆயிரக்கணக்கான மாணவர்கள், மக்கள் பேரணியாக கிளிநொச்சி பொது மைதானத்தை வந்தடைந்தனர்.

அங்கு சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்ட மேடையில் 2ஆம் லெப்.மாலதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு ஈகச்சுடரினை வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றினார். தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன.

2ஆம் லெப். மாலதியின் நினைவு தின நிகழ்வுகள் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலும் நடைபெற்றன.

மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கு அவரது தந்தையாரான பேதுரு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். (ம-4-9-8-31-73-86-180)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
இக்கல்வியாண்டுக்கான இறுதிப்பிரிவுகள் 18-10-2003 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.
புலமைப் பரிசில் திட்டம் 2003 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.
இப்பிரிவில் அனைத்து Diploma கற்கைநெறிகளும் ஆரம்பமாகும்.
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.

தேவை
எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு காசாளர், கணக்காளர் (பெண்கள்) தேவை. தகைமைகள க.பொ.த. உயர்தரத்துடன் கணனி சார் அறிவு விரும்பத்தக்கது.
நேரில் வரவும்:- 13.10.03 தொடக்கம் 18.10.03 வரை
நேரம்:- 10.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை
பாஸ்ட் ஸ்ரூடியோ அன கலர்லாப்.
392, பிரதான வீதி,
(சென்.ஜோன் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம்.
(C/30644)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ஜோதிகா, ரம்பா லைலாவின்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

CHEMISTRY
GROUP CLASSES
DIAS
B.Sc.(Hons) Spl.Chem.
அலகுரீதியான,முழுமையான மீட்டல் வினா விடை.
74, Palaly Rd.,Thirunelvely.

இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
ரம்பா, லைலா, ஜோதிகா, விவேக்
பிளாஷ் சீடி ஹவுஸ்
இல. 640, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.- 0777 - 162349

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 8 மணி மாலை 5 மணி வரை
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077-6080660, 021-2226188.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.